
# தமிழர் பொருணமியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 68 05.05.2024


# வாகன இறக்குமதித் தடை நீக்கப்படப்போகின்றதா?







150 க்கும் அதிகமான பறவைகளுடன் அழகாகக் காட்சிதரும் சரணாலயம் 08



சாகாவரம் பெறுமா யாழ்ப்பாணம்? 16



டேனியல் கானமெனின் பொருளாதார பார்வை 18



நேர் மறையான சிந்தனை வெற்றிக்கு வழிவகுக்குமா? 22

# வாட்டி வதைக்கின்ற வரட்சி; செப்ரெம்பர் வரை தொடரும்

**நேர்கண்டவர் பி.பார்த்தீபன்**

**கடந்த காலங்களில் சில இடங்களில் கிணற்று நீர்ச் செறிவு குறைவாக இருந்துள்ளது. இப்போது வெப்பம் - அதன் மூலமான ஆவியாக்கம் காரணமாக கிணற்று நீர் மட்டம் குறைந்திருக்கின்றது. இதனைவிட, மாரி காலத்தைவிட தற்போதைய காலத்தில் கிணற்று நீரைப் பயன்படுத்துவது அதிகம். இதனால், கிணற்று நீர்மட்டம் பெரும்பாலான இடங்களில் குறைந்திருக்கின்றது**

இலங்கையின் வரலாற்றில் முன்னர் எப்போதும் இல்லாத தற்போதைய கடும் வரட்சி விவசாயத் துறையில் கணிசமான பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகின்றது. இது பொருளாதாரப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தும். யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தமிழர்பொருண்மியம் வார இதழுக்கு வழங்கிய நேர்காணலில் இது குறித்து முக்கியதகவல்களைத்தெரிவித்தார். கடந்த மாதம் சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காகச்சென்றிருந்தகலாநிதிபிரதீபராஜா, CERTIFIED METEOROLOGIST சான்றுப்படுத்தப்பட்ட வானிலையாளராக அங்கீகாரம் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கேள்வி - நாட்டில் தொடரும் கடுமையான வரட்சி, வடக்கு, கிழக்கு விவசாயத்துறையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

பதில் – விவசாயத்துறையில்தான் இது அதிகளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும். நீர்ப்பாசனத்தைநம்பியுள்ளசிறுபோகத்தைப் பொறுத்தவரையில் ஒரு வரையறுக்கப் பட்டளவில்தான் நீர் குளங்களில் இருக்கும். அதை அடிப்படையாகக்கொண்டுதான் விவசாயப் பரப்பு தீர்மானிக்கப்பட்டிருக்கும். நீர்ப்பாசன கால இடைவெளியும் தீர்மானிக்கப்பட்டிருக்கும்.

இக்காலப்பகுதியில்குறிப்பாகநெற்பயிர்ச் செய்கையில் நீர் வயல்களில் தேங்கி நிற்பது வெப்பத்திலிருந்து அந்தப் பயிரைப் பாதுகாப்பதற்கானஒருவழிமுறை. ஆனால், இப்போது வயலுக்குள் தேங்கிநிற்கும் நீரே பயிருக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. ஏனென்றால், அந்த நீர் இப்போது விரைவாக சூடாகின்றது. அது பயிரைப் பாதிக்கும். வன்னியில் நான் பல இடங்களுக்குச் சென்ற போது, நெல்சூட்டுப் போட்டுது என செய்கையாளர்கள் சொல்வதைக் கேட்கிறேன். நீர்சூடாகுவதால் இந்த நிலை ஏற்படுகின்றது. பயிருக்கு நீர் விட்டு அடுத்த நாளே நிலம் வெடிப்பதை இப்போது பார்க்க முடிகின்றது. காலையில் விடும் நீர் மாலையில் சூடாகிவிடுகின்றது.

மற்றைய பயிர்களுக்கு இந்தக் காலப் பகுதியில் அதிகமான ஆவியீர்ப்பு





**கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா**

இடம்பெறும். சிறு தோட்டங்கள், வீட்டுத் தோட்டங்களில்இந்தநிலையைக்காணலாம். அதிகளவு ஆவியீர்ப்பைச் செய்யும் பயிர்களுக்குஅதிகளவானநீர்தேவைப்படும். இந்தக் காலப்பகுதியில் வழமையைவிட மூன்றுமடங்குஅதிகமானநீர்பயிர்களுக்குத் தேவைப்படும்.

அதேவேளையில், சில பயிர்களுக்கு நாங்கள் தொடர்ச்சியாக தண்ணீர் விடுவதில்லை. குறிப்பாக, உழுந்து, பயறு, கௌபி போன்றவற்றுக்கு தொடர்ச்சியாக தண்ணீர் விடுவதில்லை. ஆனால், தற்போதைய காலப் பகுதியில் இவற்றுக்குத் தொடர்ச்சியாக தண்ணீர்விட வேண்டிய தேவை உள்ளது.

**கேள்வி - இந்த நிலையில் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்குவிவசாயிகள் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்?**

பதில் – முதலாவது, நெற்செய்கையிலும் ஏனைய பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மாலை நேரத்தில் நீரைப் பாய்சினால் அது நிற்கும். சிலர்தமது வசதிக்காக காலை வேளையில் நீரை விடுகின்றார்கள். அது பகலில்சூடாகிவிடும். அதனால்அந்தநீரேஅதற்குபாதிப்பாகிவிடும். அதனால், மாலையில் அல்லது இரவில் நீரை விடுவது நல்லது. அதனால், நீர் ஆவியாகிப் போகாது. நீரும்சூடாகி



பயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாவது.

இரண்டாவது, உரங்கள், கிரிமிநாசினிகள் போன்றவற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் குறைந்தளவில் பாவிக்க வேண்டும். ஏனென்றால், உரம் போட்டால் அதனுடைய இரசாயண செயற்பாடுகளுக்காக அதிகளவு நீர் தேவை. அதனால், இக்காலப் பகுதியில் இரசாயண உரப் பாவனை, கிருமி நாசினிகளைத் தெளிப்பது போன்றவற்றை முடிந்தளவுக்குத் தவிர்த்து, மே மாதம் 8,9 ஆம் திகதிகளுக்குப் பின்னர் மழை வீழ்ச்சி ஒன்றுக்கான சாத்தியம் இருப்பதால், அக்காலப் பகுதிகளில் இதனைச் செய்யலாம்.

மூன்றாவதாக, இக்காலப் பகுதியில் புதிய பயிர்களை நாட்டுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. மழை எதிர்பார்க்கப்படுகின்ற காலப் பகுதியில் இதனைச் செய்யலாம்.

**கேள்வி - நிலத்தடி நீரும் வற்றிப்போகக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் கூறியிருந்தீர்கள். அதன் பாதிப்புக்கள் எவ்வாறானதாக இருக்கும்?**

பதில் – ஆம். இந்தக் காலப்பகுதியில் எமக்கிருக்கக்கூடிய மிகப்பெரிய பலவீனம் நிலத்தடி நீர் வற்றிப்போவதுதான். ஏனென்றால், கடந்த ஆண்டின் வட கீழ் பருவப்பெயர்ச்சிக் காலப் பகுதியில் கிடைத்த மழைவீழ்ச்சி சில இடங்களில் ஒரே சமனாக இருக்கவில்லை. சில இடங்களில் கூடுதலாகவும், சில இடங்களில் குறைவாகவும் கிடைத்திருக்குது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பயிர்ச் செய்கை கிணற்று நீரை நம்பியதாகத்தான் உள்ளது.

கடந்த காலங்களில் சில இடங்களில் கிணற்று நீர்ச் செறிவு குறைவாக இருந்துள்ளது. இப்போது வெப்பம் – அதன் மூலமான ஆவியாக்கம் காரணமாக கிணற்று நீர் மட்டம் குறைந்திருக்கின்றது. இதனைவிட, மாரி காலத்தைவிட தற்போதைய காலத்தில் கிணற்று நீரைப் பயன்படுத்துவது அதிகம். இதனால், கிணற்று நீர்மட்டம் பெரும்பாலான இடங்களில் குறைந்திருக்கின்றது.

இதனால், கிணற்று நீரை நம்பிய பயிர்ச்செய்கையை குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு ஒத்திப்போடவேண்டும். குறைவாக உள்ள கிணற்று நீரையும் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தினால், எங்களுடைய அத்தியவசிய வீட்டுத் தேவை, குடிநீர்த் தேவைக்கு குடிநீர் இல்லாமல் போய்விடும்.

எமது பிரதேசங்களைப் பொறுத்த வரையில் இவ்வாறு கிணற்று நீர்மட்டம் குறைவடைந்து செல்வது ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக இரக்கும். எமது பகுதிகளில் 70 வீதமான மக்கள் கிணற்று நீரை நம்பியவர்களாகவே இருக்கின்றார்கள். எனவே இதனை மிகவும் சிக்கனமாக– அத்தியவசியத் தேவைகளுக்கு மட்டும் எனப் பயன்படுத்தவது அவசியம்.

**கேள்வி - இந்த நிலை காரணமாக அண்மைய எதிர்காலத்தில் உற்பத்திக் குறைவை ஏற்படுத்தி - பொருளாதார ரீதியான ஒரு பிரச்சினையை ஏற்படுவதற்கான ஆபத்து உள்ளதா?**

பதில்–நிச்சயமாக. இந்த சிறுபோகத்தைப் பொறுத்தவரையில், சில இடங்களில் சிறிய குளங்களை நம்பிய நீர்ப்பாசன நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. பெப்ரவரி முதல் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால், மே மாதத்தில் இந்தக் குளங்களின் நீர்மட்டம் பெருமளவுக்குக் குறைந்துவிட்டது. இந்தப் பயிர்களுக்கு தொடர்ச்சியாக நீர்ப்பாய்ச்ச வேண்டிய தேவை உள்ளது. அதனால், இந்த மே மாதத்துக்குப் பின்னர் இதனைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படலாம். அல்லது, பயிர்கள் அழியும் ஆபத்தும் உள்ளது.

இரண்டாவதாக, அதிக வெப்பம், ஆவியீர்ப்பு காரணமாக அறுவடை வீழ்ச்சியடையும். அதுவும் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும். ஒட்டமொத்தமாகப் பார்த்தால், இக்காலப் பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற சிறுபோகப் பயிர்ச் செய்கை உட்பட அனைத்து வகையான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளையும் இது பெருமளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

**கேள்வி - இந்த வெப்ப நிலை இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தொடரும்?**

பதில் – வழமையாக எமது கால நிலையைப் பொறுத்த வரையில் செப்ரெம்பர் வரைக்கும் வெப்ப நிலை தொடர்வதுண்டு. மார்ச் முதல் செப்ரெம்பர் வரையான காலத்தில் எமது பகுதிகளில் பெரும் மழைக்கான வாய்ப்பு குறைவு. இருந்த போதிலும் சித்திரைக் குழப்பம், சித்திரை சிறுமாரி என்ற அடிப்படையில் சித்திரை 28 ஆம் திகதிளவில் மழைக்கிடைப்பதை கடந்த காலங்களில் நாம் பார்த்திருக்கின்றோம்.

மே மாதத்தின் ஏழாம் திகதிக்குப் பின்னர் சிறு மழைக்கான வாய்ப்பு உள்ளது. அதனைத் தவிர்த்தால் செப்டம்பர் வரை மழைக்கான வாய்ப்புக்கள் இல்லை. அதனால், இந்த வெப்ப நிலை செப்ரெம்பர் வரை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளது.

**கேள்வி - கடந்த காலங்களில் இலங்கை இந்தளவுக்கு மோசமான வெப்ப நிலையை அனுபவித்திருக்கின்றதா?**

பதில் – 2008 இல் இது போன்ற ஒரு வெப்ப நிலையை குறிப்பிட்ட காலத்தில் எதிர்கொண்டிருக்கின்றோம். அதற்கு முன்னர் 1994 இல் இது போன்ற வெப்ப நிலையை எதிர்கொண்டிருந்தோம். அதற்கு முன்னர் குறைவு. ஆனால், கடந்த கால வெப்ப நிலையைவிட இந்த ஆண்டு இந்தக் காலப்பகுதியில் காணப்படும் வெப்ப நிலை – உணரக் கூடிய வெப்ப நிலையின் அளவு கடந்த எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு மிகவும் உயர்வாக இருக்கின்றது. அதாவது, கடந்த தினங்களில் பெரும்பாலான இடங்களில் 47 செல்ஸியற்றுக்கும் அதிகமாக உணரக்கூடிய வெப்ப நிலை காணப்பட்டது. இந்த நிலை தொடர்ந்தால் மனித உடலில் அசௌகரியமான நிலை ஏற்படும். நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்தும் இருக்கின்றது.

எமது மனித செயற்பாடுகளும், ஏனைய இயற்கைச் செயற்பாடுகளும் இந்த அதீதமான வெப்ப நிலைக்குக் காரணமாக இருக்கலாம்.

**மின்மடல் :** tamilseconomy@gmail.com
**தொலைபேசி :** 0764438620

## வாக்குறுதிகள்

மே தினம் என்பது தொழிலாளர் தினம் என்பதை மறந்து ஒவ்வொரு கட்சிகளும் தமது பலத்தைக் காட்டுவதற்கு அதனைப் பயன்படுத்துவது இலங்கையின் வழமையாகிவிட்டது. இம்முறை தேர்தல்களும் எதிர்கொள்ளப்படுவதால் பிரதான கட்சிகள் அனைத்தும், இவ்விடயத்தில் அதிகளவுக்கு அக்கறையைக் காட்டியிருந்தன. குறிப்பாக கட்சிகளுக்குள் பிளவுகள், புதிய கூட்டணிகள் என அமைக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொரு கட்சிகளின் ஆதரவும் எவ்வாறு உள்ளது என்பதை அறிவதற்கு மே தினப் பேரணிகள் உதவும் என மக்களும் எதிர்பார்த்தர்கள்.

எதிர்பார்த்தளவுக்கு அவர்களால் கூட்டத்தைக் கொண்டுவரமுடியவில்லை. வந்தவர்களிலும் பலர் எதற்காக வந்தார்கள் என்பதும் இரகசியமானதல்ல. கூட்டத்தைக் கொண்டுவருவதற்காக பல கோடி ரூபாக்கள் செலவிடப்பட்டது என்ற தகவல்களும் இப்போது வெளியாகியுள்ளது. ஆக, பிரதான கட்சிகள் மீதான நம்பிக்கையைக் கூட மக்கள் இழந்துவிட்டார்கள் என்பது வெளிப்படை. கட்சிகளின் வாக்குறுதிகள் அனைத்துமே செயலுருப் பெபறுவதில்லை என்பதால், மக்களின் நம்பிக்கையை அவர்களால் தக்கவைக்க முடிவதில்லை.

மலையகத்தில் நடைபெற்ற இ.தொ.கா.வின் மேதின நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியமான அறிவித்தல் ஒன்றை வெளியிட்டார். தோட்டத் தொழிலாளர்களின் தினசரி வேதனம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்படும் என பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் அவர் அறிவித்தார். மலையக மக்கள் நீண்ட காலமாகவே வேதன அதிகரிப்பை எதிர்பார்த்திருந்தவர்கள். அதனால், இந்த அறிவிப்பு அவர்களிடம் பலத்த வரவேற்பைப் பெறும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

காலையில் இந்த அறிவிப்பை வெளியிட்ட ஜனாதிபதி அன்று மாலை கொழும்பில் இடம்பெற்ற ஐ.தே.க.வின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டார். மலையகத்திலிருந்து அவர் கொழும்பு வருவதற்கு முன்னதாகவே இந்த சம்பள உயர்வை வழங்க முடியாது என்ற அறிவிப்பை முதலாளிமார் சம்மேளனம் வெளியிட்டுவிட்டது. பெருந்தோட்ட தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாள் சம்பளத்தை 1700 ரூபாவாக உயர்த்தி, ஊதிய உயர்வுக்கான வர்த்தமானி அறிவிப்பை சம்பள நிர்ணய சபையும் வெளியிட்டிருந்தது.

ஆனால், அதனையும் மீறி முதலாளிமார் சம்மேளனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதற்கு சில காரணங்களையும் அவர்கள் முன்வைத்திருக்கின்றார்கள். ‘தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் உலக சந்தையில் தேயிலைக்கான கேள்வி குறைவடைந்துள்ளதால் தேயிலைத்துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் என்பனவற்றின் அடிப்படையில் இந்தச் சம்பள அதிகரிப்பை வழங்குவது சாத்தியமற்றது. இந்த விவகாரம் தொடர்பில் ஏற்கனவே தொழிற்சங்கங்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்ததைகளில் எமது நிலைப்பாட்டை திட்டவட்டமாக அறிவித்திருந்தோம்’ என்பது அவர்களின் கருத்து.

அப்படியானால், ஜனாதிபதி எதற்காக இந்த வெற்று வாக்குறுதியைக் கொடுத்தார்?

### வாரம் ஒரு சிறு தானியம்-

# தினை விதைத்தவன்

**திணை இலங்கையில் பயிராகும் ஒரு வகை உணவுப் பொருளாகும். தினை மாவு அதிக சத்து கொண்ட உணவுகளில் ஒன்று. இதற்கு இறடி, ஏனல், கங்கு என்ற வேறு பெயர்களும் உண்டு. தேனும், தினை மாவும் முருகனுக்கு பிடித்த உணவாக புராணங்களில் சொல்லப் படுகிறது. இது காய்ச்சலைப் போக்குகிறது. பசியை தூண்டி விடுகிறது.**

**பூரணி**

தினை (Foxtail millet) ஒரு தானிய வகை. இதை மனிதர்களும் விலங்குகளும் உணவாகப் பயன்படுத்துகின்றனர். தினை உலகிலேயே அதிகம் உற்பத்தி செய்யப்படும் தானியங்களில் ஒன்று. இது கிழக்காசியாவில் 10,000 ஆண்டுகளாகப் பயிரிடப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆங்கிலத்தில் இது மில்லட் எனும் வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ள தானியமாகும். தினைக்கதிர் என்பது நரி வாலைப் போல பச்சை நிறத்தில் காட்சியளிப்பதால் இது பாக்ஸ் டைல் மில்லட் என அழைக்கப்படுகின்றது. இது இட்டாலியன் மில்லட் எனவும் ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது.

தினை மாவு அதிக சத்து கொண்ட உணவுகளில் ஒன்று. இதற்கு இறடி, ஏனல், கங்கு என்ற வேறு பெயர்களும் உண்டு.

தினையில் உடலுக்குத் தேவையான புரத சத்துகளும், ஊட்டச்சத்துகளும் நிறைந்துள்ளன. இதில் உள்ள சத்துக்கள் என்னவென்று விரிவாக பார்க்கலாம்.

தினையை நாம் சிறுதானியம் என்ற வகையில் சேர்க்கிறோம். இதனை சைனீஸ் மில்லட், ஜெர்மன் மில்லட், ஹங்கேரியன் மில்லட் என்று பல வகையாக பிரிக்கிறார்கள். தினைக்கு ஆங்கிலத்தில் ‘பாக்ஸ் டெயில் மில்லட்‘ என்று பெயர். கதிரோடு இருக்கும் தினையை பார்க்கும்போது அது நரியின் வால் போல் தெரிவதால் வெள்ளையர்கள் அப்படியொரு பெயரை வைத்துவிட்டார்கள். தினை உலகிலேயே அதிகம் பயிரிடப்படும் தானிய வகைகளில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. தினை உற்பத்தியில் சீனா முதலிடத்தையும், இந்தியா இரண்டாவது இடத்தையும் கொண்டுள்ளது. பழங்காலத்தில் முதலாவதாக பயிரிடப்பட்டு மனிதனால் உபயோகிக்கப்பட்ட தானிய வகை தினை தான். அதுவும் கி.மு.6,000 கால கட்டத்திலேயே சீனாவில் பயிரிடப்பட்டு உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது.

தற்பொழுதும் சீனாவின் வட மாநிலங்களில் அதிகம் பயிரிடப்படும் தானியம் தினை தான். தினை இலங்கையில் பயிராகும் ஒரு வகை உணவுப் பொருளாகும். தினை மாவு அதிக சத்து கொண்ட உணவுகளில் ஒன்று. இதற்கு இறடி, ஏனல், கங்கு என்ற வேறு பெயர்களும் உண்டு. தேனும், தினை மாவும் முருகனுக்கு பிடித்த உணவாக புராணங்களில் சொல்லப்படுகிறது. இது காய்ச்சலைப் போக்குகிறது. பசியை தூண்டி விடுகிறது.

நம் முன்னோர்களின் உணவுகளாக அரிசி, கேழ்வரகு, கம்பு, வரகு, தினை முதலியன இருந்தது. இதனால் அவர்களின் உடலானது தேக்கு மரம் போல் திடமாக இருந்தது. இன்று இவற்றின் உணவுப் பயன்பாடு குறைந்து கடைசியாக அரிசியையும் தவிடு நீக்கி, பாலீஷ் செய்து சாப்பிடும் நிலைக்கு வந்து விட்டோம். இதனால் இன்று உடல் வலுவிழந்ததோடு நோயின் பாதிப்புக்கும் ஆளாகிறது. இப்படி நாம் இழந்த பொருட்களுள் தினையும் ஒன்று. மலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு தேனும், தினை மாவுமே உணவாக இருந்தது. தற்போது அவர்களும், தினை என்றால் என்ன என்று கேட்கின்றனர். தினையில் உடலுக்குத் தேவையான புரத சத்துகளும், ஊட்டச்சத்துகளும் நிறைந்துள்ளன. இப்போது மீண்டும் தினை உணவின் மீது மக்களுக்கு ஆர்வம் ஏற்பட்டு இருப்பது மகிழ்ச்சியான செய்தி. தினை உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது.

» தினை பயிர் செய்ய, வடிகால் வசதியுள்ள மணல்பாங்கான மண்வகை ஏற்றது.
» இதன் காலம் 3 மாதங்கள். ஆடி, ஆவணி ஆகிய பட்டங்கள் ஏற்றவை.
» முதலில் இரண்டு சால் சட்டிக் கலப்பையிலும், அடுத்து இரண்டு சால் கொக்கிக் கலப்பையிலும் குறுக்கு-நெடுக்காக உழவு செய்ய வேண்டும்.
» இரண்டு கிலோ விதையை 5 கிலோ மணலுடன் கலந்து, 2 லிட்டர் பீஜாமிர்தத்தில் முக்கி எடுத்து நிழலில் உலர்த்தி விதைநேர்த்தி செய்ய வேண்டும்.
» பிறகு விதைத்து கொக்கிக் கலப்பை மூலம் ஒரு உழவு செய்ய வேண்டும்.
» மண்ணில் இருக்கும் ஈரப்பதத்திலேயே 7-ம் நாளில் முளைப்பு எடுத்து விடும்.
» மழை இல்லாத நேரங்களில் மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து 15 முதல் 20 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டினாலே போதுமானது. மீ இருபதாம் நாளில் களை எடுக்க வேண்டும். அதற்கு மேல் பயிர் வளர்ந்து மூடிக் கொள்ளும்.
» இருபதாம் நாள் மற்றும் 40 மற்றும் 60-ம் நாட்களில் 60 லிட்டர் தண்ணீரில் 6 லிட்டர் ஜீவாமிர்தக்கரைசலைக் கலந்து, வயல் முழுவதும் தெளிக்க வேண்டும்.
» இதற்கு மேல் எந்த உரமும் இடத் தேவையில்லை.
» தினையைப் பூச்சி, நோய் தாக்காது.
» எழுபதாம் நாளில் கதிர் பிடித்து, 90-ம் நாளில் கதிர் முற்றி, அறுவடைக்குத் தயாராகி விடும்.
» ஏக்கருக்கு சராசரியாக 800 கிலோ வரையில் விளைச்சல் கிடைக்கும்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,77,050 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,93,100 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** வேளான் சுற்றுலா தொடர்பாக பொருண்மியம்வார இதழில் சில கட்டுரைகள் வெளிவந்திருந்தது. இலங்கையைப் பொறுத்தவரையில், இது எந்தளவுக்கு சாத்தியம்?

**கே.சற்குணம், நெல்லியடி.**

**பதில் -** நிச்சயமாக அது சாத்தியமானது. நன்கு திட்டமிட்ட முறையில் செயற்பட்டால், இலங்கையிலும், குறிப்பாக வடக்கு கிழக்கில் இதனை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும். ஏற்கனவே சில நிறுவனங்கள், பண்ணைகளுடன் கூடிய பொழுதுபோக்கு மையங்களை அமைத்திருக்கின்றன. இன்னும் மக்களை அவை பெருமளவுக்குக் கவராத போதிலும், அவை வேகமாக வளர்ச்சியடைந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான சுற்றுலா வாசிகளையும் கவரக்கூடிய பண்ணை ஒன்றை அமைக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் சில இருக்கின்றன. இது குறித்து ஆய்வாளர் ஒருவர் தெரிவித்திருந்த கருத்துக்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துபவர்களுக்கு உதவக்கூடும். அவை குறித்து சுருக்கமாகப் பார்ப்போம்.

வேளாண் சுற்றுலாவுக்கு மூன்று வகையான தலையாய கொள்கைகள் இருக்கின்றன. அவை சுற்றுலாவாசிகளை ஈர்க்கும் வகையில் கண்கவர் பொருட்களை வைப்பது, பொழுதுபோக்கு அம்சங்களை உள்ளடக்கி செயல்பாடுகளை வகுப்பது, மற்றும் பண்ணையில் விளையும் பொருட்களை வாங்கும் வகையில் வசதி ஏற்படுத்தி தருவது. இம்மூன்று கொள்கைகளை உள்ளடக்கியே வேளாண் சுற்றுலா இருத்தல் வேண்டும்.

ஜனநாயகத்துக்கு எப்படி நான்கு தூண்கள் இருக்கின்றதோ, அதே போல் வேளாண் சுற்றுலாவுக்கும் நான்கு தூண்கள் இருக்கின்றன. அவை, பயிர் சாகுபடி, பொழுதுபோக்கு அம்சங்கள், பரிமாறப்படும் உணவு வகைகள் மற்றும் தங்குவதற்கான அறைகள். இவை எல்லாவற்றையும்விட வேளாண் சுற்றுலா பண்ணையானது முதன்மையாக விவசாயிகள், அதனூடே கிராமம், வேளாண்மை ஆகியவற்றோடு சங்கமிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.

புதியதொரு தொழிலை ஆரம்பிக்கும்போது சாதக பாதகங்களை கணக்கில் கொள்ள வேண்டும். மேலும் தொழிலின் நீடித்தத் தன்மை, சந்தையில் அதற்கு உண்டான வரவேற்பு போன்றவற்றையும் கவனத்தில் வைக்க வேண்டும் என்பது தலையாய விதி. அத்தகைய விதி வேளாண் சுற்றுலாவுக்கும் பொருந்தும். வேளாண் சுற்றுலாவை ஆரம்பிக்கும் பண்ணையாளர்கள் பண்ணையை தேர்வு செய்யும்போது பண்ணை அமைந்திருக்கும் சூழலை கவனிக்க வேண்டும். தேவையான தரவுகளை அவர்கள் திரட்ட வேண்டும்.

மக்களிடம் வேளாண் சுற்றுலாவின் பலன்களை விளக்குவதன் மூலம் அவர்களின் வருகையை அதிகரிக்கச் செய்ய முடியும். அந்த வகையில், வேளாண் சுற்றுலா மூலம் நல்ல வருமானம் ஈட்ட முடியும். விவசாயத்துடன் இணைந்ததாக இதனையும் செய்வதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கலாம்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -

tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 140/= |
| உருளைக்கிழங்கு | 180/= |
| பச்சை மிளகாய் | 200/= |
| தக்காளி | 160/= |
| மரவள்ளிக்கிழங்கு | 100/= |
| கோவா | 100/= |
| கரட் | 100/= |
| வாழைக்காய் | 120/= |
| சின்ன வெங்காயம் | 280/= |
| பாகற்காய் | 600/= |
| வெண்டக்காய் | 100/= |
| பயற்றங்காய் | 160/= |
| பீற்றூட் | 160/= |
| முருங்கக்காய் | 600/= |
| தேங்காய் | 110/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 190/= |
| கனடா டொலர் - | 212/= |
| சீன யுவான் - | 39/= |
| யுரோ - | 312/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 214/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 365/= |
| சுவிஸ் பிராங் - | 318/= |
| அமெரிக்க டொலர் - | 292/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 200/= |
| கனடா டொலர் - | 222/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 224/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 380/= |
| சுவிஸ் பிராங் - | 334/= |
| அமெரிக்க டொலர் - | 301/= |

**'கணைக்கால் பந்தர் தொடர்நாய் யாத்த துன்னரும் கடி நகர்' ( பெரும்–125) எண்ட பெரும்பாணாற்றுப்படை வரியிலை சொல்லுறார் கண்டியோ எண்டுவார் அப்பு**

**முந்தி அநேகமா எங்கடை எல்லா வீடுகளிலையும் நாயள் வளப்பினம் . பொதுவா பறட்டை நாய் எண்டிற ஊர் நாய்தான் வளப்பினம் எண்டாலும் சில வீடுகளிலை அல்சேசன் ,பொமரேனியன் நாயளும் நிண்டது . உந்த அல்சேசன் நாயை எங்கடை ஆக்கள் போலீஸ் நாய் எண்டும் பொமரேனியனை சடை நாய் எண்டும் சொல்லுறவை .**

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

எங்களோடைபடிச்சசிலுப்பாத்தலையோட திரிஞ்ச பெட்டை ஒண்டுக்கு சடைநாய் எண்டு பெடியள் பட்டம் வைச் சவங்கள் . பொதுவாஆக்கள்நாயளைக் குட்டியிலேயே பிடிச்சந்துவளப்பினம்.உப்பிடிக்குட்டியளைப் பிடிக்கேக்கை அதுகளின்ரை வாய் கறுப்பா இருக்கோ எண்டு பாப்பினம் ஏனெண்டால் வாய் கறுப்பா இருந்தால்த்தான் அது கடிநாயாவரும்எண்டுஆக்கள்சொல்லுறவை .

உப்பிடிக் கொண்டுவாற குட்டியளை கிடங்கு வெட்டி அதுக்குள்ளை விட்டு தெருவிலை உலாத்திக்கொண்டு நிக்கப் பிடிச்சந்தவன்.

பேந்து பாத்தா நாய்க்குட்டிக்காறர் வந்து அவனோடை சண்டை பிடிச்சு அதை வாங்கிகொண்டு போனவை .

குட்டியளைப் பிடிக்கேக்கை கடுவன் குட்டியளைத்தான் பிடிப்பினம் பெட்டைக் குட்டி எண்டால் ஆக்கள் விரும்பாயினம்.

சபெட்டை நாய் வீட்டிலை நிண்டால் ஊரிலை நிக்கிற கண்ட கிண்ட கடுவன் நாயளும் வீடுகளுக்கு வந்து மனிசரை நிம்மதியா இருக்க விடாதுகள் . பேந்து குட்டிகுட்டியாஎண்டுதள்ளுங்கள்குட்டியளை வளக்கிறதோடை கடி எறும்பும் தின்னக் குடுப் பினம் அப்பிடிக் குடுத்தால்த்தான் அது இன்னும் கடியனா வரும் எண்டுவினம் .

பொதுவா குட்டித்தாச்சி நாயள் நிக்கிற இடத்திலை குட்டி போட முதலே சொல்லி வைச்சு குட்டி பால் மறந்த பிறகு குட்டியைக்கொண்ணந்து வளப்பினம்

இல்லாட்டில்தெருவழியைஅனாதையாத் திரியிறகுட்டியளைபிடிச்சருவினம்.சிலதுகள் ஆன தீன் இல்லாமல் ஊழலிச்சுப் போய் கசநோய்க்காரர்மாதிரிநிக்குங்கள்.சிலதுகள் நல்லாத் திண்டு குடிச்சு உருண்டு திரண்டு நிக்குங்கள் . சில ஆக்கள் மாதிரியே சில பெட்டை நாயளும் குட்டியளைத் தெருவ ழியைஎண்டுஅதுகளைஅனாதையாத்திரிய விட்டுப்போட்டு தங்கடை அலுவல் களைப்பாக்கப் போடுங்கள்,

இல்லாட்டில் இன்னொருக்கா குட்டி போட எண்டு கண்ட கடுவன் நாய்க்கும் பின்னாலையும் ஓடுங்கள். உப்படித்தான் ஒருக்கா உவன் எங்கடை பக்கத்துவீட்டுக் குஞ்சன் ஆரோ வளத்த குட்டி ஒண்டு ஆர் பரியரிக்கிறது எண்டு ஆக்கள் சொல்லுவினம்.

சில தெரு நாயள் உப்பிடி வீட்டிலை வளக்கிற பெட்டை நாயளோடை சிநேகிதம் பிடிச்சு வீடுவழியை வந்து சேந்துடுங்கள் . இப்பிடி வாறதுகள் உந்த எல்லை வேலிக் கதியால்களை மெல்ல மெல்லத் தள்ளி அடைக்கிற ஆக்கள் மாதிரி முதலில படலையுக்கை வந்து நிக்கும். பேந்து முத்தத்திலைவந்துநிக்கும்.பேந்துவீட்டிலை நிக்கிற நாயளுக்கு வைக்கிற தீனிலை வாய் வைக்கும்.

பேந்து எலெக்சன் கேக்கிற வேட்பாளர் மாதிரிவாலை ஆட்டிஆட்டிவீட்டுக்காருக்கு வால் பிடிச்சு அங்கையே நிக்க வெளிக்கிட்டு பேந்து அதுகும் வீட்டு நாயா மாறிவிடும்.

நாயள் வளக்கிறவை பொதுவா வைரவர் எண்டு தங்கடை நாயளைக் கூப்பிட்டாலும் அதுகளுக்குஏதும்ஒருபெயரும்வைப்பினம். அப்பிடி வைக்கேக்கை அதுகளின்ரை நிறத்தை வைச்சு கறுவல், சிவலை , வெள்ளை, நரையன் எண்டு வைச்சாலும் சிலவேளை தங்கடை கோவக்காறர் இல்லாட்டில் பிடிக்காத ஆக்களின்ரை பெயர்களையும் வைப்பினம் .

கொஞ்சம் பந்தா காட்ட நினைக்கிறவை வெள்ளைக்காரப் பெயரா வைப்பினம் .எங்கட வீட்டில நிண்ட நாய் ஒண்டுக்கு கணபதி எண்டு பெயர் . இன்னொண்டுக்கு ராசன் எண்டு பெயர் . அப்பு நெடுக அடே கள்ள நாயே கணபதி இஞ்சை வாடா..... மோட்டு நாயே கணபதி இஞ்சை வாடா..... என்ன நாயே கணபதி வர ..வர.. உனக்குத் திமிர் கூடுது..அடிச்சு முறிச்சன் எண்டால்



தெரியுந்தானே எண்டு வெறி ஏறுகிற நேரம் எல்லாம் சும்மா சும்மா தனகிப் பேசுவார் .

ஆச்சியின்ரை மாமா முறையான ஒரு ஆளுக்குகணபதிஎண்டுபெயர்அவரோடை அப்புவுக்கு என்னவோ ராட்டல் ஒண்டு இருந்திருக்குது எண்டது பேந்துதான் ஆச்சி சொல்லி எனக்கு விளங்கிச்சு.

நாய்க்கு நாய், நாஇ, பைரவன், ஞமலி, ஞாளி, ஞாமிறு, கூரன், குக்கல், குக்கன், அக்கன், அலிபகம், குரைமுகன், எகினம், எகினன், சுனகன், சுவானம், சாரமேயன், சகுடம், உரோகதி, சுவா எண்டு எக்கச் சக்கமான பெயர்கள் சங்க இலக்கியங்களிலை இருக்குது எண்டு அப்பு சொல்லுவார் .

தெருவழியைநிக்கிறநாயெண்டாலென்னை வீட்டிலை நிக்கிற நாயெண்டாலென்னை எந்த நேரம் பாத்தாலும் நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு வீணி ஊத்தின படி இருக்குங்கள் . அதுகள் தங்கடை உடம்பு வெக்கையைக் குறைக்க வேணும் எண்டு போட்டுத்தான்உப்படிநாக்கைநீட்டிக்கொண்டு நிக்கிறதுகள் . உண்மையோ பொய்யோ தெரியாதுஉப்பிடிஉதுகள்நாக்கைத்தொங்கப் போட்டுக் கொண்டு நிக்கிறதாலைதான் அதுகளைநாய் எண்டுசொல்லுறது எண்டு எங்கட பாலேங்கச் சட்டம்பி சொல்லுறவர் எண்டுவார் அப்பு .

எங்கடை பழைய இலக்கியங்கள் வீட்டுநாய் , வேட்டைநாய் , செந்நாய் எண்ட காட்டுநாய் , நீர்நாய் எண்டு நாலுவிதமான நாயளைப்பற்றிக் கதைக்குது எண்டு சொல்லுற அப்பு நாங்கள் இப்ப வளக்கிற மாதிரியே அப்ப அந்தக் காலத்திலையும் வீடுகளிலை நாயளை வளத்து இருந்திருக் கிறாங்கள் எண்டுவார் .

உந்த நாயள் வீடுகளுக்கு அப்ப நல்ல காவலா இருந்திருக்குதுகள். நாங்கள் முத்தத்திலை தலைவாசல் கப்பிலை எங்கடை ராசனைக் கட்டி விடுகிறமாதிரி அவங்களும் அந்தக் காலத்திலை முத்தத்திலை இருந்த பந்தல் காலிலை தங்கடை நாயளைக் கட்டி வைச்சிருந் திருக்கிறாங்கள். அப்படி கட்டி வைச்ச நாய் நல்ல காவலா இருந்திருக்குது எண்ட செய்தியைகடியலூர்உருத்திரங்கண்ணனார் **'கணைக்கால் பந்தர் தொடர்நாய் யாத்த துன்னரும் கடி நகர்'** ( பெரும்–125) எண்ட பெரும்பாணாற்றுப்படை வரியிலை சொல்லுறார் கண்டியோ எண்டுவார் அப்பு.

# வரி விளம்பரம் — classified advertisement




## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு – 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாய பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தொழிலாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு – 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276616

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403614

---

நாட்டின் பல பாகங்களில் கிளைகளைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குகளைப் பராமரித்தல், வங்கிநடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299366

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள Software and Web Developement நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை onlinewin@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் subject இல் Software and Web Developement குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் [Advertisement Collector] முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு – அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. light vehicle driving license - B, C, G1 சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770884805

---

## விற்பனைக்கு

தரமான கலப்படமற்ற சுத்தமான கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பியை 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0784438820

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஷ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் கொண்டவை 150 ரூபாய் மட்டுமே.
தொடர்புகளுக்கு – 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன – 0783352762 – கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட [illegible] கள் கொண்ட சுத்தமான [illegible] விற்பனைக்கு உண்டு. - 0780225528 மன்னார்.

---

புதிதாகக் கன்று ஈன்ற கறவை மாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு – 0777 421996 கிளிநொச்சி.

---

இணைந்த வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள – 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். – 0766882219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
– 0773872309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் – 0778128448

வாரஇதழ்...
தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருணமியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட
0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

# மன்னாரில் பார்க்க வேண்டிய இடங்கள் - 02




## 150 க்கும் அதிகமான பறவைகளுடன் அழகாகக் காட்சிதரும் சரணாலயம்



நிஷாந்தினி பிரபாகரன்



மன்னாரில் காணப்படும் இயற்கை வனப்புக்கள் உல்லாசப் பயணிகளைக் கவர்பவை. கடந்த வாரங்களிலும் அவை குறித்த முக்கியமான குறிப்புக்கள் சிலவற்றைப் பார்த்தோம். அதனன் தொடர்ச்சியாக மேலும் சில இடங்களை இந்த வாரம் பார்ப்போம்.

### குதிரைமலை முனை

குதிரைமலை கடலினுள் புகுந்திருக்கும் முனையும் இலங்கையின் மேற்கு கடற்கரையில் சிலாபத்துறைக்கு அருகில் மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ளது. இது மன்னார் பண்டைய பண்டைய துறைமுக நகரமும் ஆகும். இது முன்பு யாழ்ப்பாண தீபகற்ப அரசின் பண்டைய தலைநகர் நல்லூருக்கு நகருமுன் தலைநகராகவும் பன்னாட்டு வர்த்தக மையமாகவும் விளங்கியது. குதிரைமலை புத்தளம் மாவட்ட வடமுனையில் அமைந்து, பயனுள்ள மன்னார் தென்துறைமுகமாகவும், யாழ் தீபகற்ப மற்றும் வன்னி அரசுகளின் தென்முனை எல்லை நகரமாக பயன்பட்டது.

இது திருகோணமலையிலிருந்து வன்னிக்கு மேற்கில் அமைந்துள்ளது. இதன் கரையிலிருந்து முத்தகழ்வு இடமும் பண்டைய கிராமமுமான வங்காலை 20 கி.மீ தூரத்தில் வடக்கில் அமைந்துள்ளது. வரலாற்று புகழ்மிக்க திருக்கேதீச்சரம் ஆகிய வரலாறுகளை பகிர்ந்து கொண்டுள்ளது.

**ஐப்பசி மாதத்தில் இருந்து பங்குனி மாதம் வரையான காலப்பகுதியில் உலகின் வடபகுதியில் இருந்து நூற்றுக் கும் மேற்பட்ட பறவைகள் பல்லாயிரம் கிலோ மீற்றர்களை கடந்து மன்னார் தீவினை வந்த டைகின்றன. இப்பறவை களை அவை இனப்பெருக்கம் செய்யும் நாடுகளில், அதீத குளிர் காரணமாகவும் சுகமாக வாழ்வதற்கு இடமின்மை காரணமாகவும் இலங்கையை வந்தடை கின்றன**






### மன்னார் பறவைகள் சரணாலயம்

4,800 ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட மன்னார் பறவைகள் சரணாலயம் (வான்கலை லகூன் அல்லது வான்கலை சரணாலயம் என்றும் அழைக்கப்படுகிறது) புலம்பெயர்ந்த பறவைகளின் பரந்த வரிசையாகும். 2008





ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புத் துறையால் இப்பகுதி ஒரு சரணாலயமாக அறிவிக்கப்பட்டது.

மேலும் பறவைகள் அமைதியாக வாழ்வதற்காக பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளை (சதுப்புநிலங்கள், உப்பு சதுப்பு நிலங்கள், குளங்கள், நீர்நிலைகள், புல்வெளிகள் மற்றும் பல) வழங்குகிறது. 2010 இல், சரணாலயம் இருந்தது. ராம்சார் மாநாட்டின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநில தளமாக அடையாளப்படுத்தி, ராம்சார் தளமாக அறிவித்தது. இடம்பெயர்ந்த பருவத்தில் 20,000 க்கும் மேற்பட்ட நீர்ப்பறவைகளை வழங்கும், அதன் பெரிய நீர்ப்பறவை மக்களுக்கு விதிவிலக்கான உணவு மற்றும் வாழ்விடங்களை வழங்குவதாக அறியப்படுகிறது.

ஸ்பாட்–பில்ட் வாத்து, சீப்பு வாத்து, நீண்டகால்வாத்து, பெரேக்ரின்ஃபால்கன்கள் மற்றும் மிகவும் அரிதான கிழக்கு பிளாக்–டெயில்காட்விட் உட்பட பல அரிய செழிப்பான பல்லுயிர் பறவைகளை இங்கு காணலாம். பார்வையாளர்கள் ஃபிளமிங்கோக்களை தளத்தில் காணலாம்.

சரணாலயத்தில் ஏறக்குறைய 150 வெவ்வேறு வகையான பறவைகள் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது, மேலும் தளத்தின் கடல் சுற்றுச்சூழல் அமைப்பு மீன், ஆமைகள், துகோங் மற்றும் முதலைகள் உட்பட 60 க்கும் மேற்பட்ட உயிரினங்களை ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது. இலங்கைக்கு இடம்பெயரும் ஆயிரக்கணக்கான பறவைகள் வரும்போது, அவர்களின் முதல் நிறுத்தம் மன்னார் பகுதி – குறிப்பாக பறவைகள் சரணாலயம். பருவத்தின் முடிவில் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன், வாங்கலைக் குளம் அவர்களின் கடைசி நிலைப் புள்ளியாகவும் உள்ளது.

ஐப்பசி மாதத்தில் இருந்து பங்குனி மாதம் வரையான காலப்பகுதியில் உலகின் வடபகுதியில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பறவைகள் பல்லாயிரம் கிலோ மீற்றர்களை கடந்து மன்னார் தீவினை வந்தடைகின்றன. இப்பறவைகளை அவை இனப்பெருக்கம் செய்யும் நாடுகளில், அதீத குளிர் காரணமாகவும் சுகமாக வாழ்வதற்கு இடமின்மை காரணமாகவும் இலங்கையை வந்தடைகின்றன. இவை மன்னாரில் உள்ள நீர் நிலைகளிலும் நீர் சார்ந்த சதுப்புநிலங்களிலும் அத்துடன் கண்டல் தாவரங்கள் உள்ள பகுதிகளிலும் தமக்கு தேவையான உணவுகளை பெற்றுக் கொள்கின்றன.

யோதா வெவா (GIANT'S TANK ஜெயண்ட்ஸ் டேங்க்) சரணாலயம்

ஜெயண்ட்ஸ்டேங்க் சரணாலயம் என்பது இலங்கையின் வடக்கு மாகாணத்தில் 10,700 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ஒரு வனவிலங்கு சரணாலயமாகும். மன்னார் தீவில் இருந்து தென்கிழக்கே சுமார் 20 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இது 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், 1954 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக ஒரு சரணாலயமாக நியமிக்கப்பட்டது.

## கீரி கடற்கரை

மன்னார் தீவில் அமைந்துள்ள அழகிய கீரி கடற்கரை அமைதியான நீர் மற்றும் சூழ்நிலைக்கு பெயர் பெற்ற, நீச்சலுக்கு ஏற்ற கடற்கரை,

## சல்லிக்கடற்கரை-விடத்தல்தீவு

விடத்தல்தீவு இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்த மன்னார் மாவட்டத்தின் முக்கிய கரையோரக் கிராமங்களுள் ஒன்றாகும். இது பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த ஒரு கிராமமாகும்.

## கட்டுக்கரைக்குளம் மன்னார்

இலங்கையின் ஐம்பெரும் வாவிகளில் ஒன்றான கட்டுக்கரைக்குளம் வடஇலங்கையில் உள்ள மிகப்பெரிய குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. வடஇலங்கையில் மன்னார் மாவட்டத்திற்கு வடகிழக்கே 26கி.மீ. தொலைவில் கட்டுக்கரைப் பிரதேசத்தில் உள்ள குருவில் என்ற சிறிய கிராமத்தில் காணப்படுகின்றது. தற்காலத்தில் இக்குளத்தைச் சுற்றிய மைந்துள்ள பிரதேசம் சிங்களத்தில் ‘யோதவேவ’ எனவும், தமிழில் ‘கட்டுக்கரைக்குளம்’ எனவும் அழைக்கப் படுகின்றது. ஆயினும் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் இக்குளம் உட்பட அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்கள் ‘பாலப்பெருமாள் கட்டு’ என்றே அழைக்கப் பட்டு வந்துள்ளது.

இக்குளத்தின் சுற்றுவட்டாரத்தில் உள்ள ஊர்களின் இடப்பெயர்களின் பின்னொட்டுச் சொற்களாகக் குளம், அடி, மோட்டை, வில், புலவு, தாழ்வு, கட்டு, காடு என முடிகின்றன. இப்பின்னொட்டுச் சொற்கள் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த இடப்பெயர்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கு தமிழ், பாளி இலக்கியங்களும், பிராமிக்கல்வெட்டுகளிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன

## மீன்பிடி கிராம அனுபவம்

மன்னார் கடற்கரைக்கு மிக அருகில் உள்ள மீனவ கிராமம். மீன்பிடி தொழிலில் ஏராளமானோர் பணியாற்றி வருகின்றனர். மீன்பிடித்தல் மற்றும் உலர்த்துதல் ஆகியவை இங்குள்ள முக்கிய ஈர்ப்புகளில் ஒன்றாகும். மன்னார் மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்கள் மற்றும் படகுகளின் எண்ணிக்கையை பார்க்கலாம். பாரம்பரிய மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடிக்க பயன்படுத்தப்படும் நவீன மீன்பிடி உபகரணங்கள் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

அவர்களுடன் கவனமாகப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என் அறிவைப் பெருக்குவது விலைமதிப்பற்றது. உண்மையில், ஒவ்வொரு வருகையும் புதிய மரபுகளைக் கண்டறியவும், அவை பயன்படுத்தப்படும் வெவ்வேறு வழிகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

# வாகன இறக்குமதித் தடை நீக்கப்படப்போகின்றதா?

**IMF** வருவாய் இலக்குகளை அடைய வேண்டும் என்கின்ற முடிவிற்கிணங்க, கருவூலக்குழு பரிந்துரைகளால் இயக்கப்படும் நிதி நிலைத்தன்மையுடன் பொருளாதார நோக்கங்களை சமநிலைப்படுத்தும் குழுவின் பரிந்துரைகளால் வருவாயை அதிகரிக்க வாகன இறக்குமதித் தடையை நீக்க வேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மோட்டார் வாகன இறக்குமதி மீதான தடையை நீக்கும் திட்டம் கருவூல அதிகாரிகளின் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் IMF நிர்ணயித்த வருவாய் இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வாகன இறக்குமதியை அனுமதிக்காமல், இந்த இலக்குகளை அடைவது கடினம் என்று குழு வலியுறுத்துகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சராகவும் இருப்பதால் அவர் இந்த பரிந்துரைகளை பரிசீலனை செய்து இறுதி தீர்மானம் எடுப்பார். இலங்கை நாணயத்தின் பெறுமதியை அமெரிக்க டொலரிற்கு எதிராக நீண்ட காலத்திற்கு கட்டுப்படுத்துவது சாத்தியமில்லை என்ற காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்படுகின்றது.

மிக முக்கியமாக, அடுத்த ஆண்டுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் அதிக வருவாய் இலக்குகளை இந்த குழு கருதுகிறது. எந்த வாகனங்களை இறக்குமதி செய்வது மற்றும் அவற்றின் உற்பத்தி ஆண்டுகள் போன்ற விவரங்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றாலும் வருவாயை அதிகரிப்பது என்கின்ற இலக்கு தெளிவாக உள்ளது: ஏற்கனவே, படிப்படியாகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, சுற்றுலாத்துறை சார்ந்த பஸ்கள், வேன்கள் உள்ளிட்ட 1,000 வாகனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், அந்நிய செலாவணி கையிருப்பு கணிசமான அதிகரிப்பு காணப்பட்டதனால் (அதாவது மார்ச் மாதத்தில் $431 மில்லியனிலிருந்து $4,951 மில்லியனாக அதிகரித்தமையால்) மோட்டார் வாகன இறக்குமதி மீதான தடையை நீக்குவதற்கான தீர்மானத்தினை அரசாங்கம் ஆலோசனை செய்து வருகின்ன்றது.

இந்த மாற்றத்தின் மூலம் $800 மில்லியன் வரையிலான வருடாந்த இழப்பு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், திட்டமிடப்பட்ட வரி வருவாய் ரூ. 340 பில்லியன் உள்ளூர் வருவாய் இலக்குகளை அடைய உதவும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. நிதி நிலைத்தன்மையுடன் பொருளாதார இலக்குகளை சமநிலைப்படுத்தும் குழுவின் நோக்கத்தை இந்த வர்த்தக பரிமாற்றம் வலியுறுத்துகிறது.





AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையில் வாகன இறக்குமதித் தடையை நீக்குவதற்கு முன் கொள்கை வகுப்பாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய சில நிதி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இங்கே:

### வருவாய் மேலாண்மை:

வரி கட்டமைப்பு பகுப்பாய்வு: வாகன இறக்குமதியின் மீதான தற்போதைய வரி கட்டமைப்பை பகுப்பாய்வு செய்து, அது போட்டித்தன்மையுடன் இருக்கும் போது இலக்குகளை அடைய போதுமான வருவாயைப் பெறுவதை உறுதிசெய்யவும். இது வரி விகிதங்கள், வரி கட்டமைப்பில் மாற்றங்கள் சரிசெய்தல் மற்றும் வாகன மதிப்பு அல்லது இயங்கு நிலை அளவுகளின் அடிப்படையில் பொருத்தமான முற்போக்கான வரி முறையை செயற்படுத்துவது ஆகியவை அடங்கும்.

சேகரிப்புத் திறன்: வரி ஏய்ப்பைக் குறைப்பதற்கும், இறக்குமதியில் இருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் உண்மையில் அடையப்படுவதை உறுதி செய்வதற்கும் வரி வசூல் திறனை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

மாற்று வருவாய் ஆதாரங்கள்: வாகன இறக்குமதி வரிகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்க மாற்று வருவாய் ஆதாரங்களை ஆராய்தல் சாலச்சிறந்தது. குறிப்பாக வரித் தளத்தை விரிவுபடுத்துவது, வரிவிலக்குகளை மதிப்பாய்வு செய்வது அல்லது புதிய, நிலையான வரிகளை செயற்படுத்துவது ஆகியவை அடங்கும்.

### நாணயமாற்று விகித மேலாண்மை:

கண்காணிப்பு மற்றும் நெகிழ்வுத்தன்மை: தடையை நீக்கிய பிறகு மாற்று விகிதத்தை உன்னிப்பாகக் கண்காணித்து, இலங்கை ரூபாய் கணிசமாக பலவீனமடைந்தால், கொள்கைகளை சரிசெய்ய அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும். இந்த முறைமையில் தற்காலிக இறக்குமதி கட்டுப்பாடுகள் அல்லது இறக்குமதி வரிகளில் மாற்றங்களை உள்ளடக்கியிருக்கலாம்.

அந்நிய செலாவணி கையிருப்பு நிலைமை: அதிகரித்த வாகன இறக்குமதியால் அந்நிய செலாவணி சந்தையில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களை நிவர்த்தி செய்ய வெளிநாட்டு இருப்புக்களின் ஆரோக்கியமான இடையகத்தை தொடர்தேர்ச்சியாக பராமரித்தல் மிகவும் அத்தியாவசியமாக அமைகின்றது.



## கடன் மேலாண்மை:

செலவு-பயன் பகுப்பாய்வு: அதிக இறக்குமதிச் செலவுகள் மற்றும் கடன் சேவைக்கான சாத்தியக்கூறுகளை விட திட்டமிடப்பட்ட வருவாய் அதிகரிப்பை உறுதி செய்ய செலவு-பயன் பகுப்பாய்வு முறையாக தயாரித்து அதனை உன்னிப்பாக பரிசீலிப்பது அவசியமாகின்றது.

கடன் மறுசீரமைப்பு: இறக்குமதி தடை நீக்கம் அதிக கடன் தேவைகளுக்கு வழிவகுக்கும் என்பதனால் கடன் நிலைத்தன்மையை மேம்படுத்த ஏற்கனவே உள்ள கடனை மறுசீரமைப்பதை முறையாக அமுல்படுத்தி செயல்படுத்துதல் மிகவும் முக்கியமாகும்.

## வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்:

வருவாய் ஒதுக்கீடுத் திட்டம்: வாகன இறக்குமதி வரி மூலம் கிடைக்கும் வருவாயை ஒதுக்கீடு செய்வதற்கான வெளிப்படையான திட்டத்தை உருவாக்குவது மிகவும் இன்றியமையாததாகும். உட்கட்டமைப்பு மேம்பாடு அல்லது பொதுப் போக்குவரத்து மேம்பாடுகள் போன்ற குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நிதி ஒதுக்குவது இதில் முக்கிய இடத்தை பெறுகின்றது.

வழக்கமான அறிக்கையிடல்: வசூலிக்கப்படும் வருவாய், உட்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் கொள்கைகளில் செய்யப்பட்ட மாற்றங்கள் உள்ளடங்கிய முக்கிய அம்சங்கள் காலத்திற்கு காலம் ஒரு திட்டமிட்ட முறைமையில் மக்களுக்கு தெரியப்படுத்துவது மிகவும் முக்கிய இடத்தை பெறுகின்றது.

இந்த நிதி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், கொள்கை வகுப்பாளர்கள் இறக்குமதித் தடை நீக்கத்துடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைக்க முடியும் மற்றும் உருவாக்கப்படும் வருமானம் இலங்கையின் நிதி ஆரோக்கியத்திற்கு சாதகமான பங்களிப்பை உறுதி செய்ய முடியும்.

இலங்கையில் வாகன இறக்குமதித் தடையை நீக்குவதற்கு முன் கொள்கை வகுப்பாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

## சுற்றுச்சூழல் பாதிப்பு:

சூழல் மாசடையும் அளவு தரநிலைகள்: சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு கடுமையான சூழல் மாசடையும் அளவு தரநிலைகளை அமைப்பது மிகவும் முக்கியமாகும். இது பழைய மற்றும் அதிக மாசுபடுத்தும் வாகனங்களை படிப்படியாக அகற்றுவதை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

மின்சார வாகனங்களுக்கு சலுகைகள்: தூய்மையான போக்குவரத்தை ஊக்குவிக்கவும், புதைபடிவ எரிபொருட்களை நம்பியிருப்பதைக் குறைக்கவும் மின்சார வாகனங்களுக்கு வரிச் சலுகைகள் அல்லது மானியங்கள் போன்றவற்றை கருத்தில் கொள்ளலாம்.

பொதுப் போக்குவரத்து முதலீடு: தனிப்பட்ட வாகனங்களுக்கு சாத்தியமான மாற்றீட்டை வழங்க பொதுப் போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துவதில் முதலீடு முதலீடு செய்வது முன்னிலை வகிக்கின்றது. இது ஒட்டுமொத்த வாகனப் பயன்பாடு மற்றும் புகை மாசுகளைக் குறைக்கும்.

## பொருளாதார பாதிப்பு:

கட்ட அணுகுமுறை: தடையை நீக்குவதற்கான சிறந்த ஒரு கட்ட அணுகுமுறையை பரிசீலிப்பதுடன், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாகனங்களில் தொடங்கி உள்ளூர் சந்தையில் ஏற்படும் தாக்கத்தை உன்னிப்பாகக் கண்காணிப்பது மிகவும் முக்கியமாகும். காலத்திற்கு காலம் அமுல்படுத்தப்பட்டு செயற்படுகின்ற கட்ட அணுகுமுறையை சரி செய்து மாற்று முறையினை அமல்படுத்துதல் வரவேற்கத்தக்கது.

இறக்குமதி வரிகள் மற்றும் ஏனைய வரிகள்: சொகுசு வாகன இறக்குமதியை கட்டுப்படுத்தவும், அதிக எரிபொருள் திறன் கொண்ட வாகனங்களை கட்டுப்படுத்தவும் இறக்குமதி வரிகள் மற்றும் ஏனைய வரிகளை முறையாக கட்டமைத்தல் அவசியமாகின்றது. பொறுப்பான வரித்தேர்வுகளை ஊக்குவிக்கும் போது இது வருவாயை உருவாக்க முடியும்.

உள்நாட்டுத் தொழில் பாதுகாப்பு: உள்நாட்டு வாகனத் தொழிலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை செயல்படுத்துவது மிகவும் முக்கிய அம்சமாகும். இது இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கான ஒதுக்கீடுகள் அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான ஊக்கத் தொகைகளை உள்ளடக்கியிருக்கலாம்.

## போக்குவரத்து மேலாண்மை:

உட்கட்டமைப்பு மேம்பாடு: போக்குவரத்தில் சாத்தியமான அதிகரிப்பைக் கையாள சாலை உட்கட்டமைப்பு மேம்பாடுகளில் முதலீடு செய்வது வரவேற்கத்தக்கது. போக்குவரத்து மேலாண்மை அமைப்புகளை மேம்படுத்துவதுடன், ஏற்கனவே உள்ள சாலைகளை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய சாலைகளை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

வாகன தரிப்பிட (பார்க்கிங்) கட்டுப்பாடுகள்: அதிகப்படியான வாகனப் பயன்பாட்டை கட்டுப்படுத்தவும், மாற்று போக்குவரத்து விருப்பங்களை ஊக்குவிக்கவும் நகர்ப்புறங்களில் பார்க்கிங் கட்டுப்பாடு களை அறிமுகப்படுத்தி இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் கட்டணங்களையும் அறவிடும் முறைமையை அமல்படுத்துவது சாதகமாக அமையும்.

## வெளிப்படைத்தன்மை மற்றும் தொடர்பாடல்:

தெளிவான வழிகாட்டுதல்கள்: இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட வாகனங்களின் வகைகள், அவற்றின் உற்பத்தி செய்து தயாரிக்கப்பட்ட திகதி வரம்புகள் மற்றும் தொடர்புடைய வரிகள் மற்றும் ஏனைய வரிகள் பற்றிய தெளிவான வழிகாட்டுதல்களை உருவாக்கவும்.

பொதுத் தொடர்பு: தடையை நீக்குவதற்கான முடிவின் பின்னணியில் உள்ள காரணத்தையும், சாத்தியமான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட தணிப்பு நடவடிக்கைகளையும் தெரிவித்தல் வேண்டும்.

தொடர்ச்சி 24ம் பக்கம்.....

# வெற்றிகரமான தற்சார்பு வாழ்க்கை

**நேர்கண்டவர் - ஞா.கவினி**

யாழ்ப்பாணத்தின்பூர்வீககிராமங்களில் ஒன்றான அளவெட்டி 215 கிராம அலுவலர் பிரிவின் கீழ் தற் சார்பு வாழ்வியலோடுகூடிய தமது வாழ்க்கையை அழகாக வாழ்ந்து வரும் ஒரு குடும்பத்தை சந்தித்தோம்..

நாங்கள் கடந்து வந்த பொருளாதார நெருக்கடிகள் எல்லாம் எங்களுக்கு பல பாடங்களை கற்றுத் தந்திருக்கிறது , கூட்டணைவான தொழில்முயற்சி ஒரு குடும்பத்தை மிகவும் வலுப்படுத்தும் என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம் என்கின்றார் குடும்பத்தின் தலைவி ராதிகா டேவிற் ஜோன்சன்

கணவர் மனைவி பிள்ளைகள் என்று எல்லோரும் அவரவருக்கு தெரிந்த தொழில்களில் ஆர்வமாக ஈடுபடுவதோடு பிள்ளைகளின்கல்வியிலும்அதிகஅக்கறை காட்டுகின்றனர் இவர்கள்.

தம்மை சுற்றியுள்ள சிறிய நிலப்பரப்பில் பத்து வருடங்களாக சிறிய வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி அதிலிருந்து வரும் மரக்கறிகளை உணவாக எடுத்துக் கொள்வதோடுமற்றவர்களுக்கும்பகிர்ந்துஅளித்து வந்திருக்கின்றனர்.

எல்லோருக்கும் பெரும் சவாலாக இருந்தகொரோனாகாலங்களில்தங்களுக்கு மிகவும் கை கொடுத்தது இந்த வீட்டுத் தோட்டமும் தையல் கலையும் தான் என்கின்றனர்.

பல்கலைக்கழகத்தில் பகிர்ந்து கொண்டிருக்கும் தனது மகளோடு சேர்ந்து ஏனைய குழந்தைகளும் தனது தொழில் முயற்சிக்கு உதவுவதாகவும், தனது தொழில் முடிந்து வீட்டில் இருக்கும் நேரங்களில் கணவன் வீட்டுத்தோட்டம்மற்றும்தையல்வேலைகளில் தனக்கு துணையாக இருப்பதாகவும் சொல்லிக் கொள்ளும் ராதிகா மிகவும் தன்னம்பிக்கை உள்ள மனுஷியாகவும் சமூகத்திலும் ஒரு முன்னோடியாகவும் திகழ்கிறார்,

காலத்தின் சூழ்நிலை கருதி தனது பாடசாலை கல்வியை இடைநிறுத்திய ராதிகாவுக்கு சிறுவயதிலிருந்தே தையல் கலையின் மீது இருந்த ஆர்வம் அவரை ஓர் தையல் வல்லுனராக மாற்றுகிறது. குறிப்பாக 15 வயதிலிருந்து இந்த தையல் கலை கொள் நுழைந்திருந்த இவர் தனது சிறுபராயத்திலேயே ஒரு தையல் நிலையத்தையும் நடாத்தி இருக்கிறார்.

மிகச் சிறிய வயதிலேயே தனக்கான ஆடைகளை தானே உற்பத்தி செய்து கொள்ளும்திறனை கொண்டிருந்த ராதிகா, ஒரு தையல் நிலையத்திலிருந்து அங்கே பலருக்கு தையல் கலையினையும் பயிற்றுவித்திருக்கிறார்.

தற்போதும் வெளிநாடு செல்வதற்கு காத்திருக்கும் பெண்கள் மற்றும் சுய தொழில் செய்ய ஆர்வமுள்ளவர்கள் என்று அநேகர் இவரிடம் தையல் கலையினை ஆர்வமாக பயின்று வருகின்றனர்.

அவர்களில் சிலர் சிறந்த தையல் கலைஞர்களாகவும் சமூகத்தில் சுய தொழில் முனைவோராக இருக்கிறார்கள் என்று பெருமையுடன் சிரிக்கிறார்கள் ராதிகா.

தையலோடுசேர்த்து,கடந்தகாலங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளை சமாளிக்கும் விதமாகதமக்குஇருக்கின்றசொற்பநிலத்தில் மிகவும் அழகாக வீட்டுத் தோட்டங்களை செய்து வருகின்றனர் இவர்கள்,

கணவன் மனைவி பிள்ளைகள் என்று கூட்டிணைவாக செய்யும் எந்த முயற்சியும் தோற்றுப் போகாது என்பதற்கு இந்த குடும்பம் ஒரு உதாரணமாக இருக்கிறது.

கிராம மட்ட அமைப்புகளில் அங்கத்துவம் வகித்த ராதிகா அங்கிருந்து கற்றுக்கொண்ட வீட்டுத்தோட்ட நடைமுறையை கொண்டு தனது வீட்டைச் சுற்றியுள்ளதளத்தைஒருசிறந்தபசுமையான இயற்கை வனப்பாக மாற்றுகிறார். அங்கே வாழைகள் மற்றும் பழ மரங்கள், மரக்கறி வகைகள் என்று நிலத்திலும் பைகளிலும் வேலிலும் ஆக கிடைக்கும் இடம் எல்லாவற்றையும் அழகாக பயன்படுத்தி இருக்கின்றார், இதற்கு அவருடைய மகன்



திருமதி.ராதிகா டேவிற் ஜோன்சன்

அவருக்குமேலும்உதவியாக இருக்கின்றார் என்று பெருமையாக சொல்கின்றார் ராதிகா .மகனின் கடுமையான முயற்சியும் தனது வெற்றிக்கு ஒரு காரணம் என்று சொல்லும் இவர் தனது பிள்ளைகள் மேல் அளவற்ற அன்பும் கணவரின் மேல் கொண்ட காதலுமாக மிகச் சிறந்த வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்.

பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மகள் தனக்கு தேவையானவற்றை தானே பெற்றுக் கொள்ளும்அளவிற்கு தொழில்முயற்சிகளில் ஈடுபடுகிறார், தையல் ஆரிவர்க் மற்றும்





கைவினைப் பொருட்களை உருவாக்குவது அன்று அவர் தனது தனி திறமைகளை அங்கே பணமாக்கிக் கொண்டிருக்கிறார். அடுத்த அடுத்த குழந்தைகளும் தாய்க்கும் தகப்பனுக்கும் தேவையான சகல தொழில் முயற்சிகளிலும் மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

குடும்பச் சுமை காரணமாக வெளியே வேலைக்குச் செல்ல முடியாத பெண்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?



என்று வினாவினோம்.

அதற்கு ராதிகா மிகவும் தெளிவாக பதிலளிக்கிறார்,

தற்போதெல்லாம் எல்லா நேரங்களிலும் கணவன்மாருடைய உழைப்பை நம்பி இருக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது, ஏனென்றால் இந்த போட்டியான உலகத்தில் அவர்களுக்கும் தொடர்ச்சியாக வருமானம் கிடைப்பது என்பது அரிதாகவே இருக்கின்றது இதனோடு திடீரென அவர்களுக்கு ஏதேனும் நோய்களோ அல்லது பலவீனங்களோ ஏற்பட்டால் அந்த குடும்பத்தை சுமக்க வேண்டிய தேவை அந்த குடும்பத்தின் தலைவியின் கரங்களுக்கு மாறுகின்றது.

அப்போது திடீரென ஒரு சுமையை தாங்க முடியாமல் தவிக்கின்ற பல



பெண்களை நாங்கள் பார்க்கின்றோம் அப்படி இராமல் கிடைக்கின்ற நேரங்களை சரியாக பயன்படுத்தி ஒவ்வொரு பெண்களும் ஒரு தொழிலை முனைந்து செய்தால் நிச்சயமாக அந்த குடும்பத்தை மிகவும் மகிழ்ச்சியாக கொண்டு செல்ல முடியும், தற்போது பிரதேச செயலகங்களில் உள்ள சிறு தொழில் அபிவிருத்தி பிரிவினர் ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் சிறந்த வழிகாட்டல்களையும் பயிற்சிகளையும் சந்தை வாய்ப்புகளையும் வழங்கி வருகின்றனர் .

அவற்றையெல்லாம் சரியாகப் பயன்படுத்துவோம் என்றால் வாழ்க்கையில் நாங்களும் ஒரு தொழில் முனைவோராகவோ தொழில் அதிபராகவோ மாற முடியும் என்று உறுதியாக கூறுகிறார்.

உண்மையில் ராதிகாவின் தன்னம்பிக்கையும் கடும் உழைப்பும் அந்த குடும்பத்தினை வெற்றியின் பணிகளை நோக்கி அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

உங்களுடைய தொழில் தொடர்பான உங்களுடைய கனவுகளை சொல்லுங்கள் ?என்றபோது

என்னுடைய தொழில் தொடர்பாகவும் சமூகம் தொடர்பாகவும் நிறைய கனவுகள் எனக்கு இருக்கிறது ஆனால் என்னுடைய சிறிய நிலப்பரப்பும், தொழில் தொடர்பாக அடுத்த கால அடியை எடுத்து வைப்பதற்கு யோசிக்க வைக்கிறது ஆனால் என்றேனும் ஒரு நாள் எனது தையல் நிலையத்தை விருத்தி செய்வதோடு இந்த வீட்டு தோட்டம் தொடர்பான செயல்பாடுகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும் அது தொடர்பாக பலரையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற பேரவா எனக்கு இருக்கிறது என்று கண்கள் மின்ன சொல்லுகிறார்.

உண்மையில் தனது குடும்பத்தை நேசிக்கும் ஒருவரால் தான் சமூகத்தையும் நேசிக்க முடியும் என்பதற்கு ராதிகா ஒரு உதாரணம்.

**கோதுமை எமது உணவுக்குள் வந்தது மிகச்சிறிய காலம்தான். அதை கஸ்டப்பட்டே பழகினோம். என்ன ஒரு லாபம் மாவாக எடுத்தவுடன் சமைக்கும் வண்ணம்தருவதால்அதைவிரைவாகஏற்றுக்கொண்ட சோம்பல் சமூகம் நாம். தினை, சாமை, குரக்கன், சலாது போன்ற தானியங்களையும் இப்படி உடன் தயாரிக்கத்தக்க வகையில் செய்து தந்திருந்தால், அவைஎமதுஉணவில்நிலைத்திருக்குமோஎன்னவோ.**

# சமையல்

# எங்கள் வாழ்வும் வளமும்



தமிழ்க்கவி

அரிசி எமது உணவில் முக்கிய அங்கம் வகிக்கிறது. அதை எமது மண்ணில் உற்பத்தி செய்து கொள்ளவும் முடியும். வன்னியிலும் சிங்கள மக்களின் வாழ்விலும் மூன்று வேளையும் அரிசிச் சோறு உண்பவர்களே அதிகம்.

காலையில் பச்சையரிசியில் செய்யும் உணவுவகைபால்கஞ்சி,சர்க்கரைப்பொங்கல், பால்பொங்கல,பச்சரிசிசோறும்கொச்சிக்காய் சம்பலும். அரிசியை ஊறவைத்து இடித்து மாவாக்கி பிட்டு, இடியப்பம், உழுந்துடன் கலந்து தோசை இட்லி, இவை இன்றும் எமது வீடுகளில் மாறாத தமிழ் சமையல். இவற்றுக்கு உவப்பாக கட்டைச்சம்பல், தயிர், நெய், நெய் உருக்கிய சுண்டல், தாளித்த சம்பல், வறுத்த சம்பல், என எத்தனை வகை. இறுக்கமான பாற்பொங்கலுடன் பொரித்த செத்தல் மிளகாய் கடித்து உண்பது எவ்வளவு மகிழ்ச்சியைத்தரும் சுவையான உணவு. இவற்றை சமைப்பதிலும் பெரிய தொழில் நுட்பமோ வாசனைனத் திரவியங்களோ கிடையாது. வெறும் முற்றிய தேங்காயின் பாலிலும் காலைச் சமையலுக்கென விசேடமாக விதைக்கும் நெல்வர்க்கங் கபளுடன் கலந்த சுவை பச்சைப்பெருமாள் கமகமவென மணக்கும் சீனட்டி. இது வெறும்ஏழுபத்தைந்துநாட்களில்விளையும். முற்பங்கன்எனஅழகியதமிழ்பெயர்களுடன் நெல் இருந்தது. அது போக ‘எச்4’ முருங்கைக்காயன், முத்துச்சம்பா, என வன்நெல் வர்க்கங்களும்; இருந்தன. அரிசி கொதிக்கும் போதே அயலைக்கிளப்பும் வாசனை.



சமைக்கும் அடுக்களை மண்ணால் முட்டச்சுவர் வைத்து கட்டப்பட்டு அடுப்புக்கு நேரே வரிச்சுகளை வரிந்து சூரிய ஒளி உள்ளே நுழையும் வண்ணம் கட்டியிருப்போம். அடுப்புக்கு நேரே ஒரு பரண் எல்லா வீட்டிலும் இருக்கும். குளிர்பதனப் பெட்டியளவுக்கு எமது விதைத்தானியங்களையும் மவற்றல் போட்டிருக்கும் இறைச்சி மீன் என்பவற்றையும் தாங்கி நிற்கும். இதைவிட அடுப்படியில் தொங்கும் ஒரு பொருள் ‘உறி’. வீட்டின் பாவனைப் பொருட்களுக்குஏற்ப இது இரண்டுமூன்றும் இருக்கும். ஒன்றில் பால்தயிர் போன்ற பொருட்களை சின்னது முதல் பெரிதுவரை அடுக்காக உறியில் தொங்க வைப்பர். இன்னொன்றில் சமைத்த கறிவகை தொங்கும். மற்றதில் மோர், நீச்சத்தண்ணி போன்ற குடிக்கும் பானங்கள் தொங்கும். இவற்றை பூனையோ எலிகளோ தீண்ட முடியாது. ஒரு மூலையில் இதே போல அடுக்குப் பானைகள் இருக்கும். மூன்று நான்கு பானைகள் அந்த அடுக்கில் இருக்கும். அடியில் ஒருவகை அரிசி தொடங்கி பல வகை மாதிரியான அரிசி ஒவ்வொரு பானையிலும் இருக்கும். அடுக்களையின்அடுக்கணிஅந்தக்காலத்துப் பெண்களின் அழகிய கைவண்ணமாக மிளிரும்.

–சமையல்களில்பெரும்பாலும்அவியல் வகைகளே இருக்கும். சமையல் முடியும் போது சில வகை கறிகளுக்கு மட்டும் தாளித்து கொட்டுவார்கள். பலதுகள் மிளகு சீரகம் ரெண்டு உள்ளிப்பல்லு என குத்திக் கலப்பதுடன் சரி. இந்தக் கலவையை கறி இறக்கும் தறுவாயில்தான் போடுவார்கள். எமது சமையல் வகைகளில் தயிர் இருக்கும். அதை ஒரு போதும் மச்சம் மாமிசம் சமைக்கும் போது கலப்பதில்லை. மீன் குழம்பில் தயிரை ஊற்றி சாப்பிடுவது பெருந்தவறு என்பாள் என்தாய். பால் தயிரை தனியாக உண்ணலாம். அல்லது



மரக்கறிகளுடன் சேர்த்து உண்ணலாம். அதை மச்சம் மாமிசத்துடன் கலப்பதால் தெய்வக்குற்றம் வரும் என்பாள். இப்போது மாட்டிறைச்சியுடன்தயிர்கலந்துசமைப்பதை எண்ணி கவலைப்படுவேன். அதில் அப்படி ஒன்றும் சுவை பெரிதாகவும் இல்லை. சமைக்கும் எல்லா பிரியாணிகளிலும் தயிரைக் கொட்டி சமைக்கும் பெரிய சமையற்காரர்களைதொலைக்காட்சிகளிலும் யூரியூப்பிலும் பார்க்க முடிகிறது.

இந்த நிலையில் எமது ஆரோக்கியம் என்னென்ன வகையில் காப்பாற்றப்பட்டது என கவனித்தால், நாம் ஒரு தோட்டத்துக்கு சொந்தக்காரர் என்பதால். தினசரி கறியில் கத்தரிக்காய் உண்டு. கத்தரிக்காய் வெள்ளைக்கறி, கத்தரிக்காய் வதக்கி குழம்பு, கத்தரிக்காய் சுண்டல், கத்தரிக்காய் பொரியல், கத்தரிக்காஜுய் பொரித்த பிரட்டல். கத்தரிக்காய் எண்ணெய்ப்பிரட்டல். கத்தரிக்காய் சம்பல், கத்தரிக்காய் வேட்டைக்கறி. எல்லாவற்றிலும் கடைசியாக உள்ள கத்தரிக்காய் வேட்டைக்கறி எனக்கு மிகவும் பிடித்தகறி. செலவும் வேலையும் குறைந்த கறி.

அந்தக்காலத்தில் பெருங்காட்டுக்கு தங்கி வேட்டையாட போவார்கள் அங்கேயே சமைத்து சாப்பிட்டு மூன்று நான்கு நாட்களுக்கு வேட்டையாடி பெரிய மிருகங்களின் மாமிசத்தை வாட்டி கருவாடு போட்டும், உடன் மிருகங்களைக் கொண்டும் வருவார்கள். இப்படி தங்கு வேட்டைக்கு செல்லும் இடத்திற்கு சமையல் உபகரணங்களை சட்டவட்டமாக கொண்டு செல்ல முடியாது. எனவே கத்தரிக்காயை வெட்டிய பின் அதில் ரெண்டு மூன்று துண்டு கருவாடு வெங்காயம் பச்சைமிளகாய் உப்புபுளிதேங்காய்ப்பால்எல்லாவற்றையும் போட்டு அப்படியே அடுப்பில் வைத்து நன்குஅவிந்தபின் இறக்கினால்அதுவொரு தனிச்சுவை. அதன்பெயர் கத்தரிக்காய் வேட்டைக்கறி.

கோதுமை எமது உணவுக்குள் வந்தது மிகச்சிறிய காலம்தான். அதை கஸ்டப்பட்டே பழகினோம். என்ன ஒரு லாபம் மாவாக எடுத்தவுடன்சமைக்கும்வண்ணம்தருவதால் அதை விரைவாக ஏற்றுக்கொண்ட சோம்பல் சமூகம் நாம். தினை, சாமை, குரக்கன், சலாது போன்ற தானியங்களையும் இப்படி உடன் தயாரிக்கத்தக்க வகையில் செய்து தந்திருந்தால், அவை எமது உணவில் நிலைத்திருக்குமோ என்னவோ.

இன்று எமது விழாக்கள் சடங்குகள் நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரு வடிவத்திற்குள் வந்துவிட்டன. அவற்றை சமைக்கவும் எமது பெண்களுக்கு நேரம் போதவில்லை. அதற்கும்ஒருசமையற்காரர்வந்துவிடுகிறார். அல்லது அதற்கான முகவர்கள் இருக்கிறார்கள். சில குறிப்பிட்ட கறிவகைகளுடன் அனைத்து விழாக்களும் மாற்றமின்றி நடக்கிறது. பாரம்பரியமாக எமது வீடுகளில் நடந்த ஒரு விழாவை கவனித்து பாருங்கள்.. அங்கே நாம் எம்மை அறியாமலேஒருசமபலஉணவுச்சமையலை செய்திருப்போம்.

கத்தரிக்காய் பால்கறி பூசனிக்காய், மரவள்ளிக்கிழங்கு பாசிப் பயறுப்பருப்பு, பயற்றங்காய் பாகற்காய், கீரை, வாழைக் காய்ப் பொரியல் அல்லது சம்பல், உருளைக்கிழங்கு தக்காளி கலந்த குழம்பு, தக்காளி தயிர்ச்சட்னி, புடலங்காய்க்கூட்டு, அப்பளப்பொரியல், மிளகாய்ப் பொரியல் வடை, பாயாசம், சுவைகளில் அறுசுவையும் வந்திருக்கிறது. மேலும் ஒரு கிழங்கு ஒரு இலை ஒரு பருப்புவகை ஒரு கொழுப்பு, சர்க்கரை என சகல சத்தும் சேர்ந்திருக்கும். அப்படியே நவீன சமையலுக்குள் திரும்புங்கள் உருளைக்கிழங்கு பிரட்டல் பருப்பு, கத்தரிக்காய் பொரித்து கொண்டக்கடலை கலந்த பிரட்டல், பெரிய வெண்காயம் தயிர்ப்பிரட்டல் வாழைக்காய் பொரியல் எந்த வகையிலும் தக்காளி சோயா போன்றவற்றின் சோஸ் அத்துடன் அஜினோமோட்டோஎனப்படும்சுவையூட்டியும் உண்டு. உண்டபின் ஐஸ்கிறீம் அல்லது பாயாசம் மேலதிகமாக சில இடங்களில் பீடா வெற்றிலை. உண்டபின் அன்று எந்த வேலையும்செய்ய முடியாத அளவுகைகால் தளரும் தூக்கம் வரும்.

இதைத்தான் சொந்தக்காசில் சூனியம் வைப்பது என்பார்கள். எமது புத்தியை நாகரிகம் என்ற பெயரில் போதையான உணவுகளுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் அடிமையாக்கி வைத்திருக்கிறோம். எவ்வளவுதான்அவியவைத்துஇறக்கினாலும் ஒருமணி நேரம் கழித்து கல்லுப் போல மாறும் சோறும் எவ்வளவுதான் எடுத்துரைத்தாலும்தகாதுஎனகண்டபின்அதையே குறிவைத்து உண்பதை பெருமையாக நினைக்கும் நாங்களும் மாறாதவரை வைத்தியசாலையின்சனக்கூட்டம்குறையப் போவதுமில்லை.



# சாகாவரம் பெறுமா யாழ்ப்பாணம்?

## பொலித்தீன் கழிவுகள் ஒரு பாரிய பிரச்சனை



லதா கந்தையா.

இரண்டாம்உலகப்போருக்குள்ஜப்பான் உள்நுழைந்த போது, தென்கிழக்காசிய நாடுகளில் (தூரகிழக்கு நாடுகள்) இருந்து கிடைத்த இறப்பர் தடைப்பட்டது. இதனால் இயற்கையாக கிடைத்த இறப்பர் பால் மூலமான உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தது. ஒன்றில்லாதுவிட்டால் பிறிதொன்றை கண்டறியும் மூளைசாலிகள் எல்லா இடத்திலும் உண்டு.

அந்தவகையில்மேற்குலகவிஞ்ஞானிகள் இயற்கையை செயற்கையால் ஈடுகட்டத் தீர்மானித்தனர்.

அதற்காக அல்லும் பகலும் பாடுபட்டார்கள். இவ்வாறு முயற்சித்த பலர் இருக்க, 1933 இல் ஃபொசெற்( Fawcef) மற்றும் கிப்சன் (Gibson) ஆகிய இருவரும் இணைந்து வேதியற்பொருட்களைஉயர் அழுத்தத்திற்கு உட்படுத்தியபோது அதாவது எதிலீன் மற்றும் பொசட்டிகைட்டின் எனப்படும் பதார்த்தங்களின் தவறுதலான கூட்டுச் சேர்க்கையால் தவறுதலாக உருவாகியதே பொலித்தீன் என்னும் அசுரக்குழந்தை. இந்த அசுரக்குழந்தை மிக மிக வேகமாக ஆயுத உற்பத்தியிலும் ஒன்றிணைந்து துரித வளர்ச்சியடையத் தொடங்கியது.

எப்போதுமே ஒரு தவறு மிக மிக ஆரோக்கியமானதாகவும் கவர்ச்சியானதாகவும் மெய்ப்பிக்கப்படும். அப்படித்தான் பிளாஸ்டிக் பாவனை பொவித்தின் பாவனை துரிதகதியாக வளர்ச்சியடைந்த போது அது எப்போதுமே உக்காத இயல்பாக இருந்தது ஆச்சரியமளித்தது. இரும்பைப்போல துருப்பிடிக்காத இயல்பை கொண்டிருந்ததது ஆச்சரியம் அளித்தது.

தண்ணீரில்கரையாதுஆச்சரியமளித்தது. வளைந்து நெளியும் ஆனால் உக்காது. எத்தனை தடவையும் மீள்சுழற்சிக்குப் பயன்படுத்தலாம். மாறி மாறி வடிவங்களை எடுத்துக்கொள்ளுமே தவிர உக்கும் இயல்பற்றவையானது.



சாகாவரம்பெற்ற பிளாஸ்ரிக்கினால் உலகம் திக்குமுக்காடத்தொடங்கியது. கண்டுபிடித்த மேற்குலக நாடுகள் பல அனுபவப்பட்டு விழித்துக்கொண்டன. ஆனால் தந்திரமாக தென்னாசிய நாடுகளையும் வளர்முக நாடுகளையும் பிளாஸ்ரிக்கைபோடும்குப்பைக்கூடைகளாக மாற்றி தமக்கு இலாபத்தையே தேடிக்கொள்கின்றன.

இந்த தந்திரத்துக்குள் இலங்கையையும் விட்டுவைக்காது தந்திரமாக அவை பயன்படுத்துகின்றன. இலங்கையில் ஒரு மாவட்டமான யாழ்ப்பாணம் இந்த பிளாஸ்ரிக்பாவனையால் எவ்வாறு தன் இயல்பை இருப்பை இழந்து கொண்டுள்ளது எவ்வாறு தன்னை பாதுகாப்பது பற்றிய ஒப்பிடலே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

அன்றாடம் நாம் எவ்வளவு பிளாஸ்ரிக் பாவனைக்குள் தள்ளப்பட்டுள்ளோம் என நோக்கின், காலையில் எழுந்து பல் விளக்கும் பற்பசையோடு பற்தூரிகை , சவர்க்காரப்பெட்டி. குளியலறை குழாய்நீர் பைப். இறப்பர் வாளிகள். தலைவாரும் சீப்பு, சட்டையில் உள்ள தெறிகள் (Button) , சாப்பாட்டு பெட்டிகள், சாப்பாட்டுத்தட்டுகள், தண்ணீர்க்குவளைகள், பாதணிகள், கருவிப்பெட்டிகள் ,

இருக்கைகள், பிளாஸ்ரிக் பைகள், பிளாஸ்ரிக்பூக்கள், விளையாட்டு உபகரணங்கள், மேசைகள், இரத்தத்தை சேகரிக்கும் பைகள், அலுமாரிகள் என கண்ணைக்கவரும் விதத்தில் அன்றாடம் தொட்டுப்பாவனைப்

படுத்தும் இராட்சதனாக பிளாஸ்ரிக் மனிதர்களோடு நெடிதுகாலம் வியாபித்து உறவாடுகிறது.



### குடிநீரும் பிளாஸ்ரிக்கும்.

யாழ்ப்பாண மக்கள் அன்றாடம் குடிநீரை விலைகொடுத்து பிளாஸ்ரிக்போத்தல்களில் மாறி மாறி ஏந்திக்கொள்கிறார்கள். பிளாஸ்ரிக்போத்தல் நீரை சுத்தமான நீராககருதுகிறார்கள். பிளாஸ்ரிக்போத்தலில் அடைக்கப்பட்ட சுத்திகரித்த நீரை வாங்குவதும் அருந்துவதும் கௌரவம் என நினைக்கிறார்கள். இந்த மனப்பாங்கு மிகவும்ஆபத்தானது. இந்தப்போத்தல்களில் இருந்து அசற்றடிசைட் ( Acetaldehyde) என்ற வேதிப்பொருள் வெளியேறுகிறது. இந்த வேதிப்பொருள் நீருடனும் கலக்கிறது. இதை அருந்தும் மனிதனுடனும் கலக்கிறது. இந்த செயற்பாடு பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைத்து வரும் சோடா மற்றும் பானங்கள் யாவற்றிலும் கலந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கலக்கும் விசம் மனிதனுக்கு மனித உடலோடு சேரும்போது நரம்புத்தளர்ச்சி, குடற்புண், வயிற்றோட்டம், புற்றுநோய் மற்றும் ஆண்மைக்குறைபாடுகளை உருவாக்குகின்றன.

இந்த விளைவுகளை யாழ்மண்ணில் பரவலாக அவதானிக்க முடிகிறது.

புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் யாழ் மாவட்டத்தில் அதிகமாக காணப்படுகிறார்கள்.

திடுக்கிடும் தகவலாக யாழ்மாவட்டத்தில் கருவளம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதாவது ஆண்மைக்குறைபாடுமலட்டுத்தன்மையை ஏற்படுத்துகின்றது. பெண்கள் கருத்தரிக்க காலதாமதமாகிறது. ஆண்களின் விந்தணுப்பெருக்கத்தை குறைக்கின்றது. இவ்வாறு விந்தணுக்கள் குறைவதற்கு டையொக்சின் எனப்படும் களைக்கொல்லி விசமும் காரணமாவதாக மருத்துவ விஞ்ஞானிகள் முதன்மைப்படுத்தியுள் ளார்கள். கடந்த பதினைந்து வருடகால அவதானத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பலர் இந்தியாவிலும் கொழும்பிலுமாக கருத்தரிப்பு நிலையங்களை நாடி குழந்தைகளைப்பெற்றுக்கொண்டமையும், தற்போது யாழ்ப்பாணத்தில் பெருகிக் கொண்டிருக்கும்கருத்தரிப்புநிலையங்களும் ஆண்மைக்குறைபாட்டின்கவலைக்கிடமான போக்கிற்கு சான்றாகின்றன.

பிளாஸ்ரிக்கிலான விளையாட்டு உபகரணங்களை சிறுவயது தொடக்கம் பாவிப்பதால் அவற்றிலிருந்து உருவாகும் வேதிப்பொருட்கள்குழந்தைகளின்கைகளில் வாய்களில் படும்போது அவை உடலில் கலக்கின்றன.

### வடிகால்களை மூடும் பிளாஸ்ரிக்.

1998 இல் வங்காள தேசத்தில் ஏற்பட்ட புயலால் பெருமளவான மனிதர்களும் ஜீவராசிகளும், வீடுகள், உடமைகள் என சேதத்தையும் உயிரிழப்பையும் சந்தித்தது. காரணம் வடிகால்கள் நீர் வடிந்தோடாது இருந்தமையே. அந்த அனுபவத்தை வைத்து வங்கதேசம் விழித்து, பிளாஸ் ரிக்பாவனைக்கு முற்றாக தடைபோட்டு வெற்றிகண்டது. இந்தவகையில் நோக் கும்போது யாழ் நகரப்பகுதியானது கடந்த மூன்று வருட மழைக்காலங்களிலும் நீர் வடிந்தோட முடியாதவாறு பிளாஸ்ரிக் போத்தல்களும் பொலித்தின் பைகளாலும் அடைபட்டுநகர்ப்புறமும்நல்லூர்ப்பகுதியும் வெள்ளக்காடாகமிதந்ததைகாணமுடிந்தது. நீடித்த இந்த வெள்ளத்தால் பலருடைய வாழ்வாதாரம் அன்றாடப்பணிகள் வியாபார நடவடிக்கைகள் என வீழ்ச்சியை சந்தித்தது. ஆனால் கற்றுக்கொண்ட பாடங்களில் இருந்து விழிப்டையாதது துயரமானதே. இந்த ஆபத்தான அறிகுறியை வைத்து விழித்துக்கொள்வது அவசியமானது.

### உயிரினப்பல்வகைமை அழிவுறுதல்.

யாழ்ப்பாணத்தில் பாவித்தவுடன் வீசக்கூடிய பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையால் பொலித்தின் குப்பைமேடாக பாசையூர் குருநகர்ப்பகுதிகள் கடற் கரையோரங்கள் வடிகால்கள் என காணப் படுவது வேதனையானது.

பிளாஸ்ரிக்கை எரிக்கலாமா? பிளாஸ் ரிக்கை ஆங்காங்கே எறிந்தால் தானே பிரச்சனை. அப்போ எரித்து விடலாமே என யோசித்தால் அது இரட்டிப்பான ஆபத்தை சுற்றுச்சூழலுக்கு ஏற்படுத்தும். பிளாஸ்ரிக்கைளிக்கும் போதுடையொக்சின் (Dioxin) எனும்நச்சுஉருவாகிறது. உலகிலுள்ள நஞ்சுகளிலேயே மிகவும் ஆபத்தான நஞ்சு டையொக்கினே. எரிக்கும்போது காற்றில் பரவி மனிதன் உட்பட உயிரினங்களின் சுவாசத்தோடுகலந்துஉடல்இழையங்களிலே நிரந்தரமாக தேங்கி விபரீத விளைவுகளை உருவாக்கிவிடும். கல்லூண்டாய் மற்றும் செம்மணிப்பகுதிகளில்மற்றும்சுடலைகளை அண்டிய பகுதிகளிலும் எரியூட்டப்பட்ட பெருமளவான திண்மக்கழிகளுக்குள் பிளாஸ்ரிக்கே பெருமளவில் இடம்பிடித் திருந்தது. அவ்வாறு எரியூட்டப்பட்டதால் காற்றோடுகலந்த நச்சுவாயுஎல்லோருடைய மூச்சுக்குழாய்களாலும் உள்நுழைந்தே இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால் பலபக்கவிளைவுகளும்ஆண்டுக்கணக்கான சுகாதாரக்கேடுகளும் உருவாகின்றன.

### விலங்கினத்துக்கு ஏற்படும்



### விபரீதம்.

பொலித்தினால் சுற்றப்பட்டு எறியப்படும் உணவுப்பொருட்களை நுகரும் விலங்கு களின் நிலையும் அந்த விலங்குகளின் உணவைஉண்ணும்மனிதனின்நிலையும் ஆபத்தானதே. யாழ்ப்பாண மாடுகளின் சாணங்களுடன் பொலித்தீன் கழிவுகளும் வெளியேறுகின்றன. இவ்வாறானமாடுகளின் மூலம் பெறப்படும் பால் மற்றும் பால் உற்பத்திப்பொருட்கள் இறைச்சி என்பன மாடுகளுக்கு மட்டுமன்றி மனிதனுக்கே சுற்றிச்சுழன்றுஆபத்தைதோற்றுவிக்கின்றன.

பொலித்தீன் சுற்றப்பட்டு எறியப்படும் உணவுகளை உட்கொள்ளும் நாய்களின் கழிவுகளிலும்பொலித்தின்வெளியேறுவதை அவதானிக்கலாம். மட்டுமன்றி ஆங்காங்கே வீசப்படும் பொலித்தீன் தாங்கிய உணவு மிச்சங்களை உண்ணும் கொக்குகள் காகங்கள் என்பன வகைதொகையில் குறைவடைந்துசெல்வதைஅவதானிக்கலாம். பொலித்தீன் உட்கொண்டமையால் அவற்றுக்கும் இனப்பெருக்க செயன்முறை பின்தள்ளப்பட்டு அல்லது வீழ்ச்சியடைந் திருக்கலாம். யாழ்ப்பாணம் என்றதும் நினைவில் வரும் காகங்களுக்கு இப்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மாதகல் மயிலிட்டி தொண்டமனாறு பருத்தித்துறைவல்வெட்டித்துறைகாக்கைதீவு அராலி நாவாந்துறை குருநகர் பாசையூர் என சுற்றிச்சுழன்று பார்க்குமிடமெங்கும் நின்ற காகங்களின் எண்ணிக்கை காணாமற்போயுள்ளது.

### மண்ணை வளமிழக்கச்செய்கிறது.

உக்கும் இயல்பை இழந்த பிளாஸ்ரிக் கழிவுகள் மழைநீரை தேக்கிவைக்க விடாது தடுக்கிறது. இதனால்மழைநீரையாழ்ப்பாண மண் தேக்கி வைக்க முடியாது போகிறது. காடுகளை வளர விடாது. கண்டல்களை வாழவிடாது. கரையோரப்பகுதிகளில் மீன்கள் பல்கிப்பெருகும் கடலடித்தளங் களினை நாசம் செய்து மீனினப்பெருக் கத்துக்குதீங்காகிவிடும். இதனால்மண்ணில் காற்றுப்புகுவதையும் தடுத்து நிறுத்திவிடும். மண்ணிற்குள் காற்று நுழைவது தடைப் பட்டால் புதிதாக மட்டுமன்றி நிலைத்து இருக்கும் தாவரங்களுக்கும் பாதகத்தை உருவாக்கி விடும். விதைகளை முளைக்க விடாது தடுக்கும். ஆங்காங்கே எறியப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளுக்குள் நீர் தேங்கி நுளம்புகளின் இனப்பெருக்கத்திற்கு காரணமாகிவிடும்.

### தீர்வு என்ன?

இலங்கையில் 2007 இல் அப்போதய சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்த மைத்திரிபாலசிறிசேனாஅவர்கள்பிளாஸ்ரிக் பைகளுக்குதடைவிதித்தார். ஜனாதிபதியான பின்2016இல்இறுக்கமானகட்டுப்பாட்டையும் மீறுவோருக்கு பத்தாயிரம் தண்டப்பணம் எனவும் அறிவித்தார். நடைமுறைப்படுத்தப் படவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் முன்னாள்அரசாங்க அதிபர்அம்பலவாணர் சிவபால சுந்தரன் அவர்கள் இறுக்கமாக நடைமுறைப்படுத்திய ஆட்டோவிற்கான மீற்றர் நடைமுறை போல பிளாஸ்ரிக் பாவனைக்கும் தடைகளை கொண்டுவரும் ஒருவரால் தான் யாழ்ப்பாணம் பல்வேறு ஆபத்துக்களில் இருந்து தப்பிக்கொள்ளும்.

முதலில் பிளாஸ்ரிக் பாவனையை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்துவது அவசியமானது.

பிளாஸ்ரிக் பைகளுக்கு பதிலாக துணிப்பைகளை நடைமுறைப்ப டுத்துவது. மீறுவோருக்கு தண்டப்பணம்.

அதிகரித்த வரி அறவிடல்.


சிறைத்தண்டனை வழங்குதல்.


அட்டைப்பெட்டிகளை பாவித்தல்.

தற்போதுபிளாஸ்ரிக்பாவனைநூற்றுக்கு பத்துவீதம் குறைவடைந்து மாற்றங்களை மலர்த்தியுள்ள போதிலும் இன்னும் தன் இருப்பை இழந்துவிடாத பொறுப்பை யாழ்ப்பாணம் உணர வேண்டும். யாழ்ப் பாணம்ஒருவர்த்தக மாவட்டம்என்பதற்காக, யாழ்ப்பாணம் ஒரு வசதிகொண்ட மாவட்டம் என்பதற்காக சுற்றுச்சூழலுக்கு தீங்கான வற்றை வியாபாரமாக்கி அழியாது பாதுகாக்கும் புத்திஜீவிகள், சமுக அக்க றையுள்ள புத்திஜீவிகளால் பாதுகாக்கப்பட வேண்டும்.

# டேனியல் கானமெனின் பொருளாதார பார்வை

**சிலவேளைகளில் மனிதர்கள் விரைவாக முடிவு எடுக்கவேண்டிய தருணங்களில் மெதுவாகவும், மெதுவாக எடுக்க வேண்டிய தருணங்களில் விரைவாகவும் முடிவுகளை எடுக்கின்றனர். இதனால், மனிதர்கள் பொருளாதாரம் சார்ந்து சிறப்பாக முடிவெடுக்கக்கூடியவர்கள் என்ற அனுமானம் தவறானது என்றார் கானமென்.**






டேனியல் கானமென் (1934 -2024). உலகப் புகழ்பெற்ற உளவியல் ஆராய்ச்சியாளர். நடத்தைப் பொருளியலில் (Behavioural Economics) மிக முக்கியமான பங்களிப்பு வழங்கியவர். மனிதர்களின் முடிவெடுக்கும் செயல்பாடு சார்ந்து இவர் எழுதிய Thinking, Fast and Slow புத்தகம் புகழ்பெற்ற ஒன்று.

அவரது பங்களிப்பை கௌரவிக்கும் வகையில், 2002-ம் ஆண்டு பொருளியலுக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.



இஸ்ரேலிய - அமெரிக்கரான கானமென் கடந்த மார்ச் 27-ம் தேதி தன்னுடைய 90-வது வயதில் காலமானார். இந்தத் தருணத்தில் அவரது பங்களிப்பை நினைவு கூர்வது அவசியம்.

நவீன சந்தைப் பொருளியலின் அடிப்படை அனுமானங்களில் ஒன்று, தனிமனிதர்கள் நுகர்வு மற்றும் உற்பத்தி சார்ந்து முடிவெடுக்கும்போது சீரிய முறையில் பகுப்பாய்வு செய்து மிகச் சிறந்த முடிவை எடுப்பதில் வல்லவர்கள். இந்த அனுமானத்தின் அடிப்படையிலேயே, பெரும்பாலான பொருளாதாரக் கொள்கை முடிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

இத்தகைய சூழலில், இந்த அனுமானம் தவறானது என்று தன்னுடைய ஆய்வின் மூலம் நிரூபித்தார் டேனியல் கானமென். (Daniel Kahneman)

இதே கருத்தை பொருளாதார நோபல் அறிஞர் ஹெர்பர்ட் சைமனும் முன்வைத்திருந்தார். எனினும், அந்த வாதத்துக்கு தன்னுடைய ஆய்வின் மூலம் திடமான நிரூபணமும், தெளிவான வரையறையும் அளித்து அதற்கொரு கொள்கை வடிவதை உருவாக்கிய பெருமை டேனியல் கானமெனையே சேரும்.

## மனிதர்கள் தடுமாறுவார்கள்:

மனிதர்கள் முடிவெடுப்பதில் சிறந்தவர்கள் என்பதால் அதுபற்றி மேலும் ஆராய்ச்சி தேவையில்லை. அவர்கள் எடுக்கும் முடிவுகளின் விளைவுகளை ஆராய்வதே போதுமானது என்று மற்றொரு நோபல் அறிஞர் மில்டன் ப்ரீட்மென் கூறிய நிலையில், அதை கானமென் மறுத்தார். மக்களின் முடிவெடுக்கும் செயல்முறையைப் பொருத்தே விளைவுகள் அமைகின்றன. எனவே, மனிதர்களின் முடிவெடுக்கும் செயல்பாட்டை ஆராய்வது அவசியம் என்று அவர் வாதிட்டார்.

தனிமனிதர்கள் முடிவெடுக்கும் செயல்பாட்டை கானமென் இரண்டு விதமாகப் பிரித்தார். ஒன்று, ஒரு விஷயத்தைப் பற்றி விரைவாக முடிவெடுப்பது. உதாரணமாக, சாலையில் வாகனத்தை முந்திச் செல்லும்போது எதிரே வரும் வாகனத்தின் வேகத்துக்கு ஏற்ப முந்திச் செல்வதா அல்லது நின்று செல்வதா என்பது விரைவாக எடுக்கப்படக்கூடிய முடிவாகும்.

இங்கே கவனிக்க வேண்டியது, எதிரே வரும் வாகனம் என்ன வேகத்தில் வருகிறது, முன்னே செல்லும் வாகனம் வேகத்தைக் கூட்டுமா அல்லது குறைக்குமா போன்ற தகவல் சரியாகக் கணிக்க முடியாதது. இங்கே, மிக விரைவாக முடிவு எடுக்கப்பட வேண்டும். இல்லையேல், மோசமான விளைவுகள் நேரிடலாம். இதுவே, திருமணம்




போன்ற நீண்ட கால அடிப்படையிலான முடிவுகளுக்கு போதிய அவகாசம் எடுத்து அனைத்து விதமான தகவல்களையும் திரட்டி ஒரு நல்ல முடிவை எடுக்க முடியும்.

சிலவேளைகளில் மனிதர்கள் விரைவாக முடிவு எடுக்கவேண்டிய தருணங்களில் மெதுவாகவும், மெதுவாக எடுக்க வேண்டிய தருணங்களில் விரைவாகவும் முடிவுகளை எடுக்கின்றனர். இதனால், மனிதர்கள் பொருளாதாரம் சார்ந்து சிறப்பாக முடிவெடுக்கக்கூடியவர்கள் என்ற அனுமானம் தவறானது என்றார் கானமென்.

அதோடு மட்டுமன்றி, மனிதர்கள் மிக சுலபமாக எடுக்கக் கூடிய முடிவுகளில்கூட தவறுகள் செய்கின்றனர். அதேபோல் மக்கள் ஆதாயம் பெறுவதைவிடவும் இழப்பைத் தவிர்ப்பதில் அதிக முனைப்புக் காட்டுகின்றனர் என்பதைகானமென் தன் ஆய்வின் மூலம் நிரூபித்தார்.

ஆதாயமும் இழப்பும்: ஒரே அளவுள்ள ஆதாயம் மற்றும் இழப்புஆகியவற்றை மக்கள் சமமாகவே பார்க்கின்றனர் என்று நவசெவ்வியல் (Neoclassical Economics) பொருளியல் கோட்பாடுகள் முன்வைக்கின்றன. இதையும் கானமென் கேள்விக்கு உள்ளாக்கினார்.

உதாரணமாக, இரு நபர்களின் ஆண்டுவருமானம் ரூ.5 லட்சம் என்று வைத்துக்கொள்வோம். நவசெவ்வியல் பொருளியல் இருவரின் பொருளாதார நலனையும் சமமாகவே மதிப்பிடுகிறது. ஆனால், ஒருவரின் வருவாய் ரூ.7 லட்சத்திலிருந்துரூ.5லட்சமாகக்குறைந்தும் மற்றொருவரின் வருவாய் ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சத்துக்கு உயர்ந்ததாகவும் வைத்துக்கொண்டால், இருவரின் பொருளாதார நலனையும் ஒன்றாக மதிப்பிட முடியாது.

இருவருடைய வருவாயும் தற்போது சமமாக இருப்பினும், உண்மையில் முன்னவர் நலம் குன்றியும் பின்னவர் சந்தோஷமாகவும் இருப்பர்.மேலும், ஒருவர் ரூ.2 லட்சம் வருவாயை இழக்கும்போது ஏற்படும் சோகமானது, அதே அளவு பணத்தை ஈட்டுவதில் கிடைக்கும் சந்தோஷத்தைவிட தீவிரமானதாக இருக்கும். எனவே, அரசின் கொள்கை முடிவுகள் மக்களின் மனநிலைக்கு தக்கவாறு மாற்றியமைக்கப்படவேண்டும் என்றார்.

ஒருவருக்கு வரியை முன்னரே பிடித்துவிட்டு சம்பளத்தைக் கொடுப்பதும், மொத்த சம்பளத்தையும் கொடுத்துவிட்டு பின்பு அதிலிருந்து வரியை பிடித்தம் செய்வதும் வரி செலுத்துவோரிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பது நவசெவ்வியல் பொருளியலின் கூற்று.

ஆனால், கானமெனின் கூற்றுப்படி, முழு சம்பளத்தையும் கொடுத்துவிட்டுப் பின்பு வரியை எடுப்பது மக்கள் மனதில் சோகத்தை ஏற்படுத்தும் என்பதாகும். அதேபோல்,மானியங்களைக்கொடுத்துவிட்டு பின்பு அவற்றைத் திரும்பப் பெறுவது பொதுநல இழப்பை ஏற்படுத்தும் என்றார்.

மனிதர்கள் எடுக்கும் முடிவுகள் தவறுகளுக்குஉட்பட்டவை. ஒருவர் எடுக்கும் முடிவு,அவரின்தன்மையையும்,திறனையும் பொருத்தது. பெரும்பாலானவர்கள் தாங்கள் செய்யும் தவறை அடுத்த முறை திருத்திக் கொள்வதில்லை. மீண்டும் அதே தவறான முடிவைதான் எடுக்கின்றனர். ஒரு நாட்டில், கணிசமான மக்கள் இம்மாதிரியான முடிவுகள் எடுப்பின் அந்த நாட்டில் 'அதிக சந்தை, குறைந்த அரசு' என்ற கொள்கை தோல்வியடையும். இதை நிவர்த்தி செய்ய, குறைந்த அரசு என்பதற்குப் பதிலாக தேவைப்படும் நேரத்தில், தேவையான அளவுஅரசின்தலையீடுஇன்றியமையாதது என்பது அவரது ஆய்வின் சாராம்சம்.

கானமெனைப் பற்றி நாம் பேசுகையில் தவறவிடக்கூடாத ஒரு பெயர் அமோஸ் ட்வெர்ஸ்கி(புதுலிவி வீஸளஷவிவதீ). கானமெனும் ட்வெர்ஸ்கியும் இணைந்து மேற்கொண்டஆராய்ச்சிதான்கானமெனுக்கு நோபல் பரிசு கிடைக்க காரணமாக அமைந்தது. நோபல் அறிவிக்கப்பட்ட சமயத்தில் அமோஸ் உயிரோடு இல்லை. இதனால், கானமெனுக்கு மட்டும் நோபல் வழங்கப்பட்டது.

பொருளியல் ஆராய்ச்சியில் இருவரின்பங்களிப்பு, எண்ணற்ற இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு தூண்டுதலாக அமையப்பெற்று அரசுக் கொள்கைகளில் வியக்கத்தகு மாற்றங்களைக் கொண்டு வந்தபடி உள்ளது. அது எதிர்காலத்தில் மேலும் பல மாற்றங்களைக்கொண்டுவரும் என்பது திண்ணம்.

ஹிட்லரின் பிடியிலிருந்து தப்பிய சிறுவன்: யூதர்களை அடையாளம் கண்டு அவர்களைக் கொலைக்களத்துக்கு அனுப்புவதற்காக சிறப்புக் காவலர்களை ஜெர்மனி அரசு நியமித்திருந்த காலகட்டம் அது.

சிறு வயதில் கானமென் தன்னுடைய நண்பன் வீட்டில் விளையாடிவிட்டு மாலை 6 மணிக்குமேல் ஆள் அரவம் இல்லாத தெருவில் நடந்து சென்றபொழுது, அவ்வாறான ஒரு காவலரின் கண்ணில் பட நேர்ந்தது.

மிகுந்த பயத்துடன் அந்தக் காவலரை விட்டு விலகிச் செல்ல ஆரம்பித்தார். ஆனால், அந்தக் காவலரோ கானமெனை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தார். கானமெனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. திகைத்துபோய் நின்றார்.

அந்தக் காவலர் கானமெனை எதுவும் செய்யவில்லை. தன்னுடைய சட்டைப் பாக்கெட்டிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்த அந்தக்காவலர், 'நீ என் மகன் போல் இருக்கிறாய். இங்கிருந்து தப்பியோடி விடு'என்று கானமெனை அணைத்தபடி உணர்ச்சி வசப்பட்டார். கானமெனுக்கு கொஞ்சம் பணமும் கொடுத்து பாதுகாப்பாக அனுப்பி வைத்தார். அன்றைய தினம் அந்தக் காவலர் எடுத்த மனிதாபிமான முடிவுதான் கானமென் என்ற மாமேதையை நமக்கு விட்டுச்சென்றது!

# அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கிழக்கின் பொருளாதாரம்

**மயிலத்தமடுமாதவனை மேய்ச்சல் தரைக்காணிக்காக 230 நாட்களையும் தாண்டிபண்ணையாளர்கள் போராடிவரும் நிலையில் வாகரை பிரதேசத்தினை பாதுகாப்பதற்கு வாகரை மக்கள் போராட்டத்தில் குதித்திருக்கும் நிலையினையும் காணமுடிகின்றது.**



**மட்டு நகரான்**

தமிழர்களின் இருப்பினை பாதுகாப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கிழக்கில் தமிழர்களின் இருப்பினை பாதுகாக்கவேண்டுமானால் போராட்டமேஅதற்கானவழிஎன்றநிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுவரும் நிலையில் அங்கு தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

மட்டக்களப்புமாவட்டத்தினைப்பொறுத்தவரையில் இன்று பல பகுதிகள் போராட்டக்களமாகவே மாறிவருகின்றது. அதுவும் விடுதலைப்போராட்டகாலத்தில்தமிழர்களின் வீரம் செறிந்த ஆற்றல்களைக் கொண்டிருந்தவர்கள் ஆண்ட பகுதிகள் எல்லாம் இன்று தமது இருப்புக்காக போராடும் நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டுவருகின்றனர்.

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைக்காணிக்காக 225 நாட்களையும் தாண்டி பண்ணையாளர்கள் போராடிவரும் நிலையில் வாகரை பிரதேசத்தினை பாதுகாப்பதற்கு வாகரை மக்கள் போராட்டத்தில் குதித்திருக்கும் நிலையினையும் காணமுடிகின்றது. வாகரை பிரதேசம் என்பது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய தளமாகயிருந்த பிரதேசமாகும். வடகிழக்கிற்கு இணைப்பு பாலமாகயிருந்து இக்கட்டான யுத்த காலத்தில் வடக்கிற்கு போராளிகளை அனுப்பிவைப்பதற்கான முக்கிய தள பகுதியாகயிருந்ததுடன் கிழக்கின் ஒரு கட்டளை மையமாகவும் இருந்துவந்தது. இன்று வாகரையில் நடக்கும் சம்பவங்களும் செயற்பாடுகளும் அங்கு தமிழர்களை அழிக்கும் நடவடிக்கையா என்ற சந்தேகத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது.

வாகரை பிரதேச செயலகப்பிரிவானது 589 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதுடன் 16 கிராம சேவையாளர் பிரிவினைக்கொண்டது. வாகரைப் பிரதேச செயலகம் எனப்படும் கோறளைப்பற்று வடக்குபிரிவானதுமட்டக்களப்புமாவட்டத்தின் வடக்குப்பகுதியைஉள்ளடக்கியது.இப்பிரிவு மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதுடன் அதன் எல்லைகளாக வடக்கில் வெருகல் ஆற்றையும் திருகோணமலை மாவட்டத்தையும், கிழக்கில் வங்காள விரிகுடா கடலையும், தெற்கில் கோறளைப் பற்று மத்தி பிரிவையும், மேற்கில் பொலன்னறுவை மாவட்டத்தையும் கொண்டுள்ளது.

அனைத்து வளங்களையும் இந்த பகுதி கொண்டிருக்கின்றபோதிலும் இங்குள்ள வளங்களை பயன்படுத்தி அப்பகுதுஸ்ரீ மக்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு பதிலாக அப்பகுதி வளங்களை தென்னிலங்கையில் உள்ள பெரும்பான்மையினத்தவர்களுக்கு தாரைவார்த்துக்கொடுக்கும்செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

யுத்தம் முடிந்த பின்னர் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் தெற்கினை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினருக்கு வளமிக்க சுமார் 1500ஏக்கர்காணிகள்வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் அண்மைக் காலமாக இல்மனைட் அகழுதல், இறால் பண்ணைஅமைத்தல்போன்றதிட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை கபளீகரம் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. இல்மனைட் அகழ்வு செய்யப்படுமானால் வாகரை பிரதேசத்தின் பல பகுதிகள் அழியும் நிலைமைமையும் ஏற்படும் என வாகரை பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பல தடவை வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பாக போராட்டம் நடாத்திய மக்கள் மட்டக்களப்பு நகருக்கும் வருகைதந்து போராடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நிர்வாகத்தினை தாண்டியதாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குறிப்பாகஇந்தநாட்டின்ஆட்சியாளர்கள் சிறுபான்மை சமூகத்தினை அடக்கி ஒடுக்குவதற்கு பல்வேறு வழிகளை கையாண்டுவருகின்றனர்.ஒரு பகுதியில் தங்களது ஆதிக்கத்தினை நிலைநிறுத்த வேண்டுமானால் அங்கு பல்வேறு வழி



களை கையாண்டுவருகின்றனர். தங்களுக்கு ஆதரவானவர்களுக்கு தேவையானவற்றினை மேற்கொள்ளல், ஆசைகாட்டி தமது செயற்பாடுகளை முன்னெடுத்தல், கொள்ளையர்களை அரசியலுக்குள் கொண்டுவந்து தமது தேவைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் போன்ற பல்வேறு வழிகளை கையாண்டுவருகின்றது.

வாகரையில் இல்மனைட் அகழ்வு என்பது வாகரையின் கரையோரப் பகுதியை முற்றாக அழிக்கும் செயற்பாடுகளே. வாகரை பகுதியின் பெரும்பாலான பகுதிகள் கடற்கரையினை அண்டியுள்ளதால் அதனை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றன. யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளின் பொருண்மிய துறையின் பெரும்பங்களை வாகரை கடற்பகுதியே பூர்த்திசெய்துவந்தது. இதன்மூலம் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரமும் விருத்தியடைந்ததுடன் பொருண்மியமும் வளர்ச்சிபெற்றது.

வாகரை பகுதியில் தமது வாழ்வாதாரத்தினை கடலை நம்பியே வாகரையில் பெரும்பாலான மக்கள் வாழ்க்கையினை முன்னெடுத்துவரும் நிலையில் இன்று வெருகல் தொடக்கம் வாகரையின் காயன்குடா வரையான பெருமளவான கடற்பகுதியில் இல்மனைட் அகழ்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. இதற்காக தெற்கில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு கடற்பகுதியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் வாகரை பகுதிகளின் மக்களின் வாழ்வாதாரத்தை மட்டுமல்ல அப்பகுதியையே அழிக்கும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் அந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையிலும் அரசாங்கம் அந்த திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கையினை எடுத்துவருகின்றது.

கதிரவெளி தொடக்கம் காயன்குடா வரையிலான மக்கள் இந்த இல்மனைட் தொழிற்சாலைக்கு எதிராக போராடிவரும் நிலையில் வறிய மக்களின் நிலையினை தமக்குசாதகமாக பயன்படுத்தி அவர்களுக்கு பொருட்களையும் பணத்தையும் வழங்கி எதிர்ப்பு நிலையினை மாற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அதற்கு எதிராகவும் வாகரை பிரதேச மக்கள் போராடவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இதேபோன்று வாகரையில் இரால் பண்ணை என்ற திட்டத்தினை முன்னெடுத்து வரும் நிலையில் இந்த இரால் பண்ணை ஆரம்பிக்கப்படுமானால் வாகரையில் நன்னீர் மீன்பிடியை நம்பியுள்ள சுமார் 15ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என வாகரை பிரதேசத்தின் சமூக செயற்பாட்டாளரான தபேந்திரன் தெரிவிக்கின்றார்.

'கடந்த காலத்தில் 2500 நிலப்பரப்பினை ஆற்றினை அண்டிய வகையில் இந்த இரால் வளர்ப்புக்கு ஒதுக்க நடவடிக்கையெடுக்கத்தபோது நாங்கள் தொடர்ச்சியாக போராட்டம் நடாத்தி அதனை தடுத்து நிறுத்தினோம். ஆனால் இன்று அந்த திட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த ஆற்றினை நம்பியே அந்த 15ஆயிரம் குடும்பங்களும் உள்ளன. அங்கு இரால் வளர்ப்பு நடைபெற காணிகள் வழங்கப்படுமானால் முதலாளிகள் இலாபம் ஈட்டுவார்கள் ஆனால் ஆற்றினை நம்பியுள்ள மீனவர்கள் வாழ்வாதாரத்தினை இழப்பார்கள். அத்துடன் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள சுமார் 45ஆயிரம் கால்நடைகள் உள்ள மேய்ச்சல் தரை பாதிக்கப்படுவதுடன் வாகரையினை தாங்கிய நிலையில் உள்ள கண்டல் தாவரங்களும் அழிக்கப்படும் நிலையேற்படும்.

இதேபோன்று ஆற்றினை சூழவுள்ள காடுகளும் அழிக்கப்பட்டுத்தான் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். கடல்நீரை ஆற்றுக்குள் பாய்ச்சிதான் இரால் பண்ணை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இவை அனைத்தும் எதிர்காலத்தில் வாகரை பிரதேசத்தினை அழிக்கும் செயற்பாடுகளாகவே நாங்கள் பார்க்கின்றோம். யுத்தகாலத்தில் நாங்கள் போராடி பாதுகாத்த பகுதியை இன்று இலகுவில் அழிக்கும் நிலையினை பார்த்துக்கொண்டு நாங்கள் பொறுமையாக இருக்கமுடியாது. எமது நிலத்தினை பாதுகாப்பதற்கு நாங்கள் உயிரைகொடுத்து போராடவும் தயாராகயிருக்கின்றோம்'' என்று தபேந்திரன் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் வாகரை பிரதேசத்தின் இந்த அழிவின் பின்னணியில் சில அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் செயற்படுவதாக வாகரை பிரதேச மக்களும் அரச உயர் அதிகாரிகளும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். இந்த நிலையில் வாகரை பிரதேச மக்களின் இந்த போராட்டத்தினை வடகிழக்கு தழுவிய போராட்டமாக முன்னெடுத்து வாகரை பிரதேச மக்களின் இருப்பினை தக்கவைப்பதற்கு தமிழ் தேசிய பரப்பில் செயற்படும் அனைவரும் முன்வரவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

# நேர் மறையான சிந்தனை வெற்றிக்கு வழிவகுக்குமா?

**வொய்ட்னி குட்மேன்**





எதையும் பொசிட்டிவ்வாக – நேர் மறையாக யோசித்தால் வெற்றி நிச்சயம் என்று இப்போது பலரும் சொல்கிறார்கள். அதை நம்பும் பலரும் எல்லா விஷயங்களையும் பொசிட்டிவ்வாகப் பார்க்கிறேன் எனக் கீழே விழுந்தால்கூட, சிரித்துக்கொண்டே எழுகிறார்கள்.

ஆனால், வெறும் பொசிட்டிவ் (நேர் மறையான) சிந்தனையும், எண்ணங்களுமே இந்த உலகில் மகிழ்ச்சியாகவும் வெற்றி கரமாகவும் வாழ்வதற்குப் போதாது என்று சொல்கிறது 'ரொக்சிக் பொசிட்டிவிட்டி' (வீலிமுஷ்உ ஊலிவிஷ்மிஷ்ஸஷ்மிதீ) என்கிற புத்தகம். அமெரிக்காவில் வசிக்கும் வொய்ட்னி குட்மேன் (Whitney Goodman) இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார்.

'பொபாசிட்டிவிட்டி பல சமயங்களில் நச்சுவாக மாறிவிடுகிறது என்பதே நிஜம். அதுஎப்படிநடக்கிறதுஎன்பதைசொல்லத்தான் இந்தப் புத்தகம்" என்று ஆரம்பிக்கும் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர், பாசிட்டிவிட்டி குறித்து பல விஷயங்களைத் தெளிவு படுத்துகிறார்.

"மருத்துவர்கள், தெரபிஸ்ட்டுகள் மற்றும் நிர்வாகிகள் பொசிட்டிவிட்டி குறித்தே தொடர்ந்து அறிவுறுத்துகின்றனர். நாமும் அதைக் கேட்டு அதுவே சரி என்று நினைக்கிறோம். எங்கும் எதிலும் எப்போதும் பொசிட்டிவ் அணுகு முறையுடன் இருப்பது சாத்தியமில்லை. அப்படி இருந்தால், நீங்கள் ஒரு ரோபோதான். மனிதர் இல்லை.

பொதுவாக, பொசிட்டிவிட்டி என்பது மோசமான விஷயம் இல்லை. ஆனால், ஓர் எல்லையைத் தாண்டினால், அது நச்சுத்தன்மை கொண்டதாக மாறிவிடுகிறது. 'ஹெல்தி பொசிட்டிவிட்டி' என்பது கண்முன்னே இருக்கும் நிஜத்துக்கும், நம்மிடம் இருக்கும் நன் நம்பிக்கைக்கும் சரிசமமான இடத்தை அளிப்பதே ஆகும்.




ரொக்சிக் பொசிட்டிவிட்டி என்பது மனித உணர்வுகளைக் குழிதோண்டிப் புதைத் துவிட்டு வாழச் சொல்லும் ஒன்றாகும். உணர்வுகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத் தலாமே தவிர, ஒரேயடியாக ஒழித்துக் கட்ட முடியாது. அப்படி முயன்றால், அது பல்வேறு பிரச்னை களைக் கொண்டு வந்து சேர்த்துவிடும்.

இன்றைக்கு அனைவருமே குட் வைப்ஸ் (Good Vibes) பற்றிப் பேசி அதை உருவாக்க மெனக்கெட்டாலுமே வெறுமனே 'குட் வைப்ஸை' வைத்துக் கொண்டு யாரும் பிழைப்பை ஓட்டிவிட முடியாது என்பதுதான் நிஜம்.

உங்களை திடீரென்று வேலையை விட்டுத் தூக்கிவிட்டார்கள். உங்கள் மனதில் பயமும் பதற்றமும் உச்சத்தில் இருக்கிறது. அடுத்து என்ன செய்வது என்ற கேள்வி பூதாகரமாக உங்கள் முன் நிற்கிறது. இந்த விஷயத்தை நண்பரிடம் பகிர்ந்து அவருடைய ஐடியாவைக் கேட்கலாம் என்று நினைத்து அவரிடம் கூறுகிறீர்கள். அவரோ, எந்தவித கவலை ரேகையும் முகத்தில் வராமல் உங்கள் கதையைக் கேட்கிறார்.

'ஒரு மனுஷன் வேலை போய்விட்டது என சொல்கிறேன்... ஒரு ரியாக்ஷனும் காணோம்' என்று நினைக்கிறீர்கள். 'இவருக்கு ஏதோ ஐடியா இருக்கிறது. அல்லது ஏதோ வேலை காலி இருக்கும் இடம் இவருக்குத் தெரிகிறது போல' என்று அடுத்த கணம் நினைக்கிறீர்கள்.

கொஞ்சம் யோசித்துவிட்டு, 'ரொம்ப நாளாக பயங்கர பிசியாக ஓடிக்கொண்டே இருந்தாய். இப்போது கொஞ்சம் நேரம் கிடைக்கும். ஆசுவாசப்படுத்திக்கொண்டு நிதானமாக யோசிக்க ஒரு வாய்ப்பு வந்துள்ளது. நல்லவேளை, இப்போது வேலை போனது. ஆறு மாதத்துக்கு முன் உன் கார் கடனை அடைக்கும் முன் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்..? அதை நினைத்து சந்தோஷப்படு. தவிர, இந்த மாதிரி ஒரு நிகழ்வில் இருந்து நீ என்ன கற்றுக்கொள்ளப்போகிறாய் என்று பாசிட்டிவ்வாக இந்த நிகழ்வைப் பார்' என்கிறார் நண்பர்.

'வேலை போய்விட்டது. அடுத்து என்ன செய்யப்போகிறேன் என்பது தெரிய வில்லை? திகைப்பாய் இருக்கிறது. இப்போது போய் இதிலிருந்து என்ன கற்றுக்கொள்வது என்று பார்; ஆறு மாதத்துக்கு முன் போகாமல் இப்போது வேலை போனதற்கு இறைவனுக்கு நன்றி சொல் என்கிறாயே... நான் என்ன சொன்னேன் என்பது உன் காதில் சரியாக விழுந்ததா?' என்றுதானே உங்களுக்குக் கேட்கத் தோன்றும்.

அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் 'ஓகே!.' என்று கூறிவிடுவோம். இப்போது உங்களுக்கு வேலையில்லாத நிலை என்பது மட்டும் இல்லை. நீங்கள் மிகவும்



மதித்தும் நம்பியும் இருந்த நண்பனும் உங்களை விட்டு வெகுதூரம் போனதுபோல் உணர்வீர்கள்.

உங்கள் நண்பருக்கு வேலை இல்லாமல் இருக்கும் உங்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் நிறையவே இருக்கலாம். அவர் சொன்னதிலும் உண்மை இல்லாமல் இல்லை. வேலை இல்லாமல் இருக்கும் நிலைமை மோசமாக இருந்தாலும், நிறைய நேரம் கிடைக்கும். நிச்சயம் இந்த நிகழ்வில் இருந்து நிறைய கற்றுக்கொள்ளவும் முடியும் என்பதை எல்லாம் மறுப்பதற்கு இல்லை. இதில் பிரச்னையே இதை எல்லாம் சிந்திக்கும் நிலைக்கு நீங்கள் இன்னும் வரவில்லை.

உங்களுக்கு வேலை போன அதிர்ச்சியில் இருந்து நீங்கள் மீளவேயில்லை. அப்செட் ஆகி மனவருத்தத்தில் இருக்கிறீர்கள். உடலும் மனதும் மிகப் பெரிய அசதியிலும் உளைச்சலிலும் இருக்கிறது. புதிய வேலையைத் தவிர, எது வந்தாலும் அது மாற வாய்ப்பில்லை. இந்த சூழ்நிலையில், உங்களுக்கு தேவையானது என்ன? நல்ல ஆதரவும், இருக்கிற சிக்கலான சூழ்நிலையை சரிசெய்து வெளியே வருவதற்கான உதவியும்தானே தவிர, வேறேதும் இல்லை.

இப்போது சொல்லுங்கள், ரொக்சிக் பொசிட்டிவிட்டி (Advice) என்றால் என்ன? நமக்குத் தேவையானது வேறு ஒன்று. ஆனால், நம்மால் ஜீரணித்து உபயோகிக்கவோ, உணர்ந்து கொள்ளவோ முடியாத சூழ்நிலையில் தரப்படும் அட்வைஸே ரொக்சிக் பொசிட்டிவிட்டி ஆகும். இது நம்மை வெட்கப்பட வைத்து, மற்றவர்கள் நம்மைக் குறைத்து மதிப்பீடு செய்வதைப்போல் நினைக்கவைத்து குழப்பத்தில் ஆழ்த்திவிடும்.

நன்றியறிதல், போதுமென்ற மனம், நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கை போன்றவை நமக்கு நீண்ட ஆயுளைத் தரவல்லது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அதில் தவறில்லை. ஆனால், பொசிட்டிவிட்டியை ஒரேயடியாக உயர்த்திப் பிடிப்பதில்தான் தவறு உருவாகிறது. 'எல்லாம் சரியாகிவிடும். இதில் இருக்கும் நல்லதை பாருங்கள்' என்பதெல்லாம் கொஞ்ச காலத்துக்கு சரி. தொடர்ந்து நீண்ட நாள்கள் கஷ்டப்படும்போது இதெல்லாம் உதவவே உதவாது.

நண்பர், 'ஆறுமாதத்துக்கு முன் வேலை போகவில்லையே என்று சந்தோஷப்படு' என்கிறார். 'இதிலிருந்து என்ன கற்றுக் கொள்ளலாம் என்று பார்' என்கிறார். அதாவது, எமோஷனை கழற்றி எறியச் சொல்கிறார். அதற்கு நீங்கள் தயாராகவே இருக்க மாட்டீர்கள்.

இப்போது என்ன செய்வது? நண்பர்களிடம் சொன்னால், பொசிட்டிவ்வாக இரு என்பார்கள். எல்லாவற்றையும் நம்முள்ளே போட்டு அடக்கிக்கொண்டு பொசிட்டிவ்வாக இருப்பதைப்போல் காட்டிக்கொள்ள வேண்டும். அதாவது, எமோஷன்களை அடக்கிக்கொண்டு கவலை இல்லாத தைப்போல் காட்டிக்கொள்ள வேண்டும்.

எதுவுமே நடக்காததைப்போல சகஜமாக இருக்க வேண்டும். அடுத்த வேலை கிடைக்கும் வரை வேலை இல்லாதது குறித்து கவலையே இல்லாததைப்போல் நடந்துகொள்ள வேண்டும். அப்படி நடந்துகொள்வது எள்ளளவும் நமக்கு உதவாது என்கிறபோதிலும், அப்படி நடந்துகொண்டேயாக வேண்டும்.

இதில் இரண்டு நிலைகள் இருக்கின்றன. வேலை போய்விட்டது. கடினமான சூழ்நிலை தான். வருத்தம் இருக்கவே செய்கிறது. ஆனாலும், வேறு வேலை கிடைக்கும் என்று நம்புகிறோம். இது ஒரு வகை.

மற்றொரு வகை வேலை இழந்ததால் வருத்தமே இல்லை என்று நம்பச் சொல்வது. இது சாத்தியமில்லாத ஒன்று. ஏனென்றால், இந்த வகை பொசிட்டிவிட்டி உணர்வே (எமோஷன்) இல்லை என்று நினைக்கச் சொல்வது. இதனாலேயே இது நச்சுத்தன்மை கொண்டது" என்று சொல்லும் ஆசிரியர், வாழ்வின் நிஜங்கள் தவிர்க்க முடியாதது என விளக்குகிறார்.

"பலரும் பொசிட்டிவிட்டியுடன் இருக்கிறேன் பேர்வழி என்று தேவை இல்லாத விஷயங்களை செய்ய ஆரம்பிப்பது இன்னும் சீர்கேடான விஷயம். நம் உணர்வுகளை நாம் தவிர்க்கவே முடியாது. அவற்றின் விளைவுகளை நாம் அனுபவித்தே ஆக வேண்டும் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எமோஷன்களை விட்டு விலகி ஓட முடியாது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்படி புரிந்துகொண்டு செயல்பட்டால் நாம் சரியான நேர்மறை எண்ணங்களுடன் செயல்பட முடியும். வருகிற கஷ்டங்களை நம்மால் எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை நமக்குள் பூக்கும்.

எப்போதெல்லாம் ரொக்சிக் பொசிட்டிவிட்டி உருவாகிறது தெரியுமா? உதவி, இரக்கம் மற்றும் நாம் நினைப்பது சரிதானா என்று சரிபார்த்துக் கொள்ள நினைத்து ஒருவரிடம் நாம் பேசும் போது, அவர் நாம் பேசும் விஷயங்களைக் கண்டுகொள்ளாமல் பயனற்ற பொசிட்டிவ் பேச்சுகள் பேசும்போது, நீங்கள் ரொம்ப உணர்ச்சிவசப்படுகிறீர்கள்.

நம்பிக்கை வைத்து கஷ்டப்பட்டு உழைப்பதில்லை என்கிற ரீதியில் ஒருவர் அவமானப் படுத்தப்படும்போது, நாம் சந்தோஷமாகவோ, தேவையான அளவு பொசிட்டிவ்வாகவோ இல்லை என்று நம்மை நாமே அவமானகரமாக நினைத்துக்கொள்ளும்போது, நாம் யதார்த்தத்தை மொத்தமாக ஒப்புக்கொள்ள மறுக்கும்போது, நியாயமான கேள்விகள் மற்றும் பயம் கொண்ட ஒருவரை அமைதிப் படுத்தும் நோக்கத்துடன் கண்மூடித்தனமாக மற்றவர்கள் அறிவுரை கூறும்போதெல்லாம் ரொக்சிக் பொசிட்டிவிட்டி உருவாகிறது" என்று கூறுகிறார் ஆசிரியர்.

"வாழ்க்கை ஒரு மனிதனுக்கு அவனால் கையாள முடியாத அளவுக்கான பிரச்னைகளைத் தருவதில்லை, எல்லாம் சரியாகிவிடும், அழாதீர்கள், ஜஸ்ட் ஸ்மைல், உங்களுக்கு பல நல்ல விஷயங்கள் நடந்து உள்ளன.

அதற்கு நன்றி உள்ளவர்களாக இருங்கள், காலம் எல்லா காயங்களையும் ஆற்றிவிடும், சந்தோஷமாகவும் பொசிட்டிவ்வாக இருங்கள்; நீங்கள் இதிலிருந்து கற்றுக் கொண்ட விஷயங்களுக்காக நன்றியுடன் இருங்கள். இதைவிட நிலைமை மோசமாக வில்லையே என்று நினைத்துக் கொள்ளுங்கள், உங்கள் வாழ்க்கையில் இருக்கும் அனைத்து நெகட்டிவிட்டியையும் வெட்டி வெளியே வீசுங்கள். நமக்கு நடக்கும் எல்லா விஷயங்களுக்கும் ஒரு காரணம் இருக்கும் என்ற வசனங்கள் உச்சரிக்கப் படும்போதெல்லாம் ரொக்சிக் பொசிட்டிவிட்டி என்பது மற்றவர் மீது திணிக்கப்படுகிறது.

சந்தோஷமா, சம்பாத்தியமா என்ற கேள்வி கேட்கப்படும்போது, 'இரண்டும் சரிசமமாக தேவை' என்கிற பதிலை நாம் சொன்னால் மட்டுமே ரொக்சிக் பொசிட்டிவிட்டியை நம்மீது திணிப்பவர்களிடம் இருந்து நம்மால் தப்பித்துக்கொள்ள முடியும்" என்று கூறி, இந்தப் புத்தகத்தை முடிக்கிறார் ஆசிரியர்.


ரொக்சிக் பொசிட்டிவிட்டி என்றால் என்ன, எப்படி அளவான பொசிட்டிவிட்டியை கொண்டு நாம் செயல்படுவது என்பது குறித்து பல்வேறு உதாரணங்கள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளுடன் எளிய நடையில் விளக்கும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன்பெறலாம்.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை 05.05.2024

# வாகன இறக்குமதித் தடை நீக்கப்படப்போகின்றதா?



4ம் பக்கத் தொடர்ச்சி.....

இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்வதன் மூலம், கொள்கை வகுப்பாளர்கள் வாகன இறக்குமதித்தடையைநீக்குவதன்எதிர்மறையான தாக்கங்களைத்தணிக்கவும், இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான சுமூகமான மாற்றத்தை உறுதிப்படுத்தவும் முடியும்.

வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் எவ்வாறு இந்த வாகன இறக்குமதி தடை நீக்கத்தினை பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதை நாம் இப்பொழுது பார்ப்போம்

### நிதி நிலைத்தன்மையை ஆதரித்தல்:

#### வணிகங்கள்:

» வரிகளை விரைவாகவும் துல்லியமாகவும் செலுத்துதல் வேண்டும்.

» மின்சாரம் அல்லது எரிபொருள் திறன் கொண்ட வாகனங்களுக்கு தள்ளுபடிகள்அல்லதுசலுகைகளைவழங்குவதைக் கருத்தில் கொண்டு தகுந்த வாகன இறக்குமதியை செயற்படுத்த வேண்டும்.

» பொறுப்பான வாகனப் பயன்பாடு மற்றும் மாற்றுப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் கொள்கைகளுக்கு ஆதரவளித்தல் வேண்டும்.

#### பொது மக்கள்:

» நேர்மையாகவரிகளைசெலுத்துதல் வேண்டும்.

» முடியுமானவரை எரிபொருள் திறன் கொண்ட அல்லது வெளிநாடுகளில் ஏற்கனவே பாவித்த முன் சொந்தமான வாகனங்களை வாங்குவதை முதன்மைப்படுத்துதல். மேலும், இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் 'பயன்படுத்திய வாகனங்களை இறக்குமதி செய்யுமாறு' அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

» பொதுப் போக்குவரத்து, கார்பூலிங் அல்லது சவாரி-பகிர்வு விருப்பங்கள் கிடைக்கும்போது பயன்படுத்த வேண்டும்.

### நிலையான சந்தையை ஆதரித்தல்:

#### வணிகங்கள்:

» நுகர்வோர் நம்பிக்கையைப் பேணுவதற்காக, இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் மீதான அதிகப்படியான விலை உயர்வைத் தவிர்த்தல் அவசியம்.

» பரந்த அளவிலான வாங்குபவர்களுக்கு வாகனங்களை இன்னும் அணுகக்கூடியதாகமாற்றநிதிவிருப்பங்களை வழங்குவது சிறந்த பலாபலன்களை உருவாக்கும்.

#### பொது மக்கள்:

» வாகனம் வாங்கும் முன் விலைகளை ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் முக்கியமாகும்.

» இறக்குமதி செலவுகள் மற்றும் வரிகளை உயர்த்துவதைத் தவிர்க்க நியாயமான முறையில் பேரம் பேசுவது மிகவும் கவனிக்கத்தக்க விடயம்.

» இயன்றளவு அத்தியாவசியமற்ற வாகனங்களை வாங்குவதை தாமதப்படுத்தவும்.

### பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்:

#### வணிகங்கள்:

» இறக்குமதி தடை நீக்கம் பொருளாதார நடவடிக்கையை உயர்த்தினால், அவற்றின் செயற்பாடுகளை விரிவுபடுத்த அல்லது புதிய பணியாளர்களைபணியமர்த்த புதிய முதலீடுகளை செயற்படுத்தலாம்.

» தேவை ஏற்படும்பொழுது சாத்தியமான உயர்வைச் சந்திக்க அந்தந்தத் தொழில் நிறுவனங்கள் அவர்களின் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து, திறமையை மேம்படுத்தலாம்.

#### பொது மக்கள்:

» இதன் மூலம் உருவாக்கப்படும் (பலமான பொருளாதாரம் காரணமாக) கூடுதல்வருமானத்தைசெலவிடும்பொழுது உள்ளூர் வணிகங்களை ஆதரிக்கும் அதே நேரம், அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பது மிகவும் அவசியமாக அமைகின்றது.

வாகன இறக்குமதி மீதான தடையை நீக்குவது வருமான இலக்குகளுடன் சீரமைக்கவும், இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தவும் கணக்கிடப்பட்ட நடவடிக்கையாக பார்க்கப்படுகின்றது. எனவே அரசாங்கமும், வர்த்தக நிறுவனங்களும், பொது மக்களும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் வாகன இறக்குமதித் தடையை நீக்கி, இலங்கையில் நிதி நிலைத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைய அதனைப் பயன்படுத்த முடியும்.

+94-777-802-900 | Email: swaminathan@agsarma.com

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.05.2024இல் வெளியிடப்பெற்றது.